# பேனா குரல்

# PENA KURAL

தமிழ் மாத இதழ்

Tamil Monthly


மலர்: 01 | இதழ்: 08 | ஜூன் 2023 | விலை: ₹ 20/- | ஆண்டு சந்தா: ₹ 240/- | சென்னை

Volume: 01 | Issue: 08 | June 2023 | Price: ₹ 20/- | Annual Aubscription: ₹ 240/- | Chennai




## புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்





## கருணாநிதி 100:

தமிழக அரசியலில் 80 ஆண்டுகாலம் அரசாட்சி செய்த திருக்குவளை முத்துவேலர் கருணாநிதி

## கலைஞர் 100

ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் கண்ட
ஏற்றமிகு தலைவரின்
புகழைப்போற்றுவோம்


www.penakural.com


SEVA
SAMARPAN
SANRAKSHAN
Making of an
Education Superpower
PM-SHRI
SCHOOLS
Pradhan Mantri Schools
for Rising India
Upgradation & development
of over 14,500 schools
across the country
Showcase of all components
of the NEP 2020
Lakhs of students
to be benefitted
NEP - National Education Policy
Source- GoI

# பேனா குரல்

PENA KURAL TAMIL MONTHLY

R.Dis. No.: 939/2022 **PENA KURAL** தமிழ் மாத இதழ்

மலர்: 01 இதழ்: 08 ஜூன் 2023 விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-


## ஆசிரியர் குரல்

## தலையங்கம்

# வரலாறு காணாத உச்சத்தில் தக்காளி விலை!

தக்காளி ஒரு மாதம் முன்புதான், மகாராஷ்டிரத்தில் போதிய விலை கிடைக்கவில்லை என்பதால் தக்காளி விவசாயிகள் தங்களது சாகுபடியை சாலையில் கொட்டி ஆத்திரத்தை வெளிப்படுத்தினார்கள். இப்போது பார்த்தால், தக்காளியின் விலை சில மாநிலங்களில் கிலோவுக்கு ரூ. 135-ஐ தாண்டியிருக்கிறது. தக்காளியின் விலை மட்டுமல்ல, வெங்காயம், உருளைக்கிழங்கு, கத்தரிக்காய், இஞ்சி, பச்சை மிளகாய் உள்ளிட்ட அன்றாட உபயோகக் காய்கறிகளின் விலையும் உயர்ந்த வண்ணம் இருக்கின்றன. தக்காளியின் விலை கடந்த ஆண்டு ஜூன் மாதத்துடன் ஒப்பிடும்போது 66% அதிகம் என்றால், வெங்காயம் (7.5%), உருளைக்கிழங்கு (4.5%) போன்றவற்றின் விலையும் கடந்த ஆண்டைவிட அதிகமாகவே காணப்படுகின்றன.

காய்கறிகள் மட்டுமல்ல, பருப்பு வகைகளின் விலையும் கடுமையாக அதிகரித்திருக்கிறது. கடந்த ஆண்டு ஜூன் மாதத்துடன் ஒப்பிடும்போது, துவரம்பருப்பின் விலை 7.8% அதிகரித்து கிலோவுக்கு ரூ. 130.75-ஐ தொட்டிருக்கிறது. இதுபோல, காய்கறி, தானியங்கள் உள்ளிட்ட உணவுப் பொருள்களின் திடீர் விலை உயர்வுக்குப் பருவமழை முக்கியமான காரணம்.

பருவமழைப் பொழிவால் குறித்த நேரத்தில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு சரக்குகளைக் கொண்டுபோய் சேர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதேபோல, குறித்த நேரத்தில் பருவமழை பெய்யாததால், சில பகுதிகளில் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. அதிகமாக தக்காளி பயிரிடப்படும் கர்நாடகம், ஆந்திர மாநிலங்களில் தக்காளி விளைச்சல் பருவமழையால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் சந்தைக்கு வரத்து குறைந்தது. தேவைக்கேற்ற விளைச்சல் இல்லாததால் விலைகள் அதிகரித்தன.

கிழக்கு பசிபிக் சமுத்திரத்தின் மேல்பரப்பில் அளவுக்கதிகமான வெப்பம் காணப்படுவதால் உருவாகும் காற்று மண்டலத் தாக்கத்துக்கு ‘எல் நினோ’ என்று பெயர். அதனால் இந்தியாவில் குறைந்த அளவு பருவமழை, தொடர்ச்சியாக இல்லாமல் விட்டுவிட்டுப் பெய்வது போன்றவை காரணமாக உணவு உற்பத்தி பாதிக்கப்படுகிறது.

சீராக இல்லாத பருவமழையும், குறித்த நேரத்தில் விளைபொருள்களை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு எடுத்துச் செல்ல முடியாததும் மட்டுமே, தொடர்ந்து அடிக்கடி ஏற்படும் இதுபோன்ற காய்கறிகளின் விலை உயர்வுக்குக் காரணங்கள் என்று சொல்லிவிட முடியாது. இந்தியாவில் காணப்படும் பல்வேறு தட்பவெப்பநிலை, வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பயிர்களையும், வெவ்வேறு பருவத்தில் வெவ்வேறு பகுதிகளில் அவற்றைப் பயிரிடுவதையும் நமக்கு வழங்கியிருக்கிறது. ஒரு பகுதியில் விவசாயம் பொய்த்தால் இன்னொரு பகுதியின் விளைச்சலால் அதை எதிர்கொள்ளும் வாய்ப்பு நமக்கு உண்டு.

உற்பத்தியான காய்கறிகளை அழுகிவிடாமல் சேமித்து வைக்கத் தேவையான குளிர்பதனக் கிடங்குகள் இந்தியாவில் இல்லை. இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும், மூலைமுடுக்குகள் வரை விளைபொருள்களை எடுத்துச் செல்லப் போதுமான சரக்குக் கையாளும் வசதியும் நம்மிடம் இல்லை. கடந்த 70 ஆண்டுகளாக இது குறித்துக் கவலைப்படாமல் இருந்துவிட்டு, இப்போதுதான் விழித்துக் கொண்டு அதற்கான முயற்சியில் இறங்கி இருக்கிறோம்.

– **ராதிகா சிவசங்கர்,** ஆசிரியர்

# உலகின் பழமையான மொழி தமிழ்:

## பிரதமர் நரேந்திர மோடி புகழாரம்



பிரதமர் மோடி தமது வானொலி நிகழ்ச்சியான மன் கி பாத் மனதின் குரலில் தமிழ் மொழி, தமிழர் பெருமை பற்றி அதிக முறை குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி அகில இந்திய வானொலியின் மூலம் நாட்டு மக்களுடன் தமது கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும், மன் கி பாத் எனப்படும் மனதின் குரல் நிகழ்ச்சி நாளை 100வது அத்தியாயத்தை நிறைவு செய்ய உள்ளது. இதுவரை ஒலிபரப்பான உரைகளில் பிரதமர் நரேந்திர மோடி, தமிழ் கலாச்சாரம் மற்றும் தமிழ் மொழி தொடர்பாக மிக அதிகளவில் குறிப்பிட்டுள்ளார். பிரதமரின் வானொலி உரையில் அதிகளவில் குறிப்பிடப்பட்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ் மொழியின் ஆழம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்க இந்த தளத்தை பிரதமர் அதிகம் பயன்படுத்தி உள்ளார். தமிழ் கலாச்சாரம் மற்றும் தமிழ் மொழி தொடர்பாக தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, உலகின் பழமையான மொழி நமது நாட்டில் தோன்றியது என்பதை நினைத்து ஒவ்வொரு இந்தியரும் பெருமைகொள்ள வேண்டும் என்று பெருமிதத்துடன் வலியுறுத்தியுள்ளார். அழகான மொழியாகவும், உலகப் புகழ்பெற்ற மொழியாகவும் உள்ள தமிழ் மொழியைக் கற்கவில்லை என்பதற்காக வருத்தம் அடைவதாகவும் பிரதமர் தமது உரையில் தெரிவித்துள்ளார்.

மனதின் குரல் உரையின் பல அத்தியாயங்களில் பிரதமர் நரேந்திர மோடி, தமிழ் மக்கள் செலுத்தும் சிறந்த தாக்கம் மற்றும் பங்களிப்புகள் தொடர்பாக பல்வேறு உதாரணங்களைப் பகிர்ந்துள்ளார். வேலூரில் நாக நதியை மீட்டெடுத்து சீரமைக்க 20 ஆயிரம் பெண்கள் இணைந்து செயல்பட்டது, தூத்துக்குடி மாவட்டத்தில் புயல் தாக்கத்தைக் குறைத்து மண்வளத்தைக் காக்க பனைமரங்கள் நடப்படுவது போன்ற கூட்டு முயற்சிகளை மனதின் குரல் நிகழ்ச்சியின் மூலம் பிரதமர் வெளிப்படுத்தி பாராட்டு தெரிவித்தார்.

பள்ளி உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த சீரமைக்க தாராளமாக பணம் வழங்கிய திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த தாயம்மாள் குறித்தும் மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் பேசியுள்ளார். வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் தமிழின் அடையாளச் சின்னமாகவும் விளங்கும். திருக்குறளின் உலகளாவிய புகழ் தொடர்பாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மன் கி பாத் எனப்படும் மனதின் குரல் மூலம், பிரதமர் நரேந்திர மோடி, தமிழ் கலாச்சாரம் மற்றும் தமிழ் மொழியை தொடர்ந்து ஊக்குவித்து அதன் செழுமையை வெளிப்படுத்தி வருகிறார். அத்துடன் தமிழின் ஆழத்தையும், சிறப்பையும் பாராட்டி அதை ஆராயும் ஆர்வத்தை மற்றவர்களுக்கு பிரதமர் ஏற்படுத்தி வருகிறார்.

# “ஒவ்வொரு பைசாவும் ஏழைகளின் நன்மைக்கே” என்ற கொள்கையுடன் அரசு செயல்படுகிறது:

## மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ்

9 ஆண்டுகள் சேவை நல்லாட்சி ஏழைகளின் நல்வாழ்வு - தேசிய மாநாட்டை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் துவக்கி வைத்தார்

9 ஆண்டுகளில் இந்தியா பலவீனமான ஐந்தில் இருந்து முதல் ஐந்து என்ற இடத்திற்கு முன்னேறியுள்ளது: மத்திய அமைச்சர் திரு அனுராக் தாக்கூர்

பிரதமர் மோடி மூவர்ணக் கொடியை உலகின் வலிமையான கொடியாக மாற்றியுள்ளார்: திரு தாக்கூர்

மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று ‘9 ஆண்டுகள் சேவை நல்லாட்சி ஏழைகளின் நல்வாழ்வு’ தேசிய மாநாட்டை புது தில்லியில் விஞ்ஞான் பவனில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர், மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல். முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் தகவல் ஒலிபரப்புத்துறையின் செயலாளர் திரு அபூர்வ சந்திரா மற்றும் பிரசார் பாரதியின் தலைமை நிர்வாக அதிகாரி திரு கௌரவ் திவேதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், ஏழையின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு காரணியாக சொந்த வீடு உள்ளது என்பதை சுட்டிக் காட்டினார். அந்த வகையில், பிரதமர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் இன்று நாட்டில் 3.5 கோடி வீடுகள் கட்டப்பட்டு ஏழைகளின் வாழ்வில் தரமான மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கின்றன என்றார்.

ஒவ்வொரு வீட்டையும் குழாய் நீர் இணைப்புடன் இணைக்க வேண்டும் என்ற எண்ணம் எப்போதுமே ஒரு பிரம்மாண்டமாகவே பார்க்கப்பட்டது. அது ஒருபோதும் சாத்தியமற்றது என்றே கருதப்பட்டது. ஆனால், பிரதமர் அதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு செயல்பட்டதால்



இன்று 12 கோடி மக்களுக்கு குடிநீர் இணைப்பு கிடைத்துள்ளது என்றும் அவர் கூறினார். அதே சமயம், பல காலமாக இருந்து வந்த கொடுமைகளுக்கு மாற்றாக அரசு பாடுபட்டு 9.6 கோடி எரிவாயு சிலிண்டர்களை வழங்கியுள்ளது என்றார்.

கடந்த காலங்களில் அரசின் திட்டங்களின் பலன்கள் ஒரு சிலரை மட்டுமே சென்றடையும் நிலையில், இன்று வரிசையில் நிற்கும் கடைசி நபரின் முன்னேற்றத்திற்கும் அரசு உறுதிபூண்டுள்ளது. 27% மக்களை ஏழ்மையிலிருந்து மீட்டெடுக்கும் அரசின் முயற்சிகளின் ரகசியம் இது என்றார். சேவை உணர்வு, சிறந்த யோசனைகள், நல்ல நிர்வாகம், தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல், விநியோக பொறிமுறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உருவாக்குதல் ஆகியவை பொது சேவைகளின் கடைசி மைல் விநியோகத்தை உறுதி செய்வதில் ஈடுபட்டுள்ளன என்றும் அமைச்சர் கூறினார்.

அரசின் 9 ஆண்டுகளுக்கான தேசிய மாநாடு, தொடக்க அமர்வுக்குப் பிறகு மூன்று கருப்பொருள் அமர்வுகள் மற்றும் ஒரு பாராட்டு அமர்வு ஆகியவற்றை உள்ளடக்கியது.

# நாடு முழுவதும் புதிதாக 50 மருத்துவக் கல்லூரிகள் தொடங்க மத்திய அரசு அனுமதி!

தமிழ்நாட்டில் 3 தனியார் மருத்துவ கல்லூரிகள் உள்பட நாடு முழுவதும் 50 புதிய மருத்துவ கல்லூரிகள் தொடங்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இதன் மூலம் மருத்துவ படிப்பிற்கு கூடுதலாக 8,195 இளங்கலை இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதனால் நாட்டில் உள்ள மொத்த இடங்களின் எண்ணிக்கை 1,07,658-ஐ தாண்டியுள்ளது. இந்த 50 புதிய மருத்துவ கல்லூரிகளில் (30 அரசு மற்றும் 20 தனியார்) கல்லூரிகளாகும். இதன்மூலம் தற்போது நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 702 ஆக அதிகரித்துள்ளது.

அதன்படி, தெலுங்கானா, ராஜஸ்தான், தமிழ்நாடு, ஒடிசா, நாகாலாந்து, மகாராஷ்டிரா, அசாம், கர்நாடகா, குஜராத், ஹரியானா, ஜம்மு-காஷ்மீர், மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் புதிதாக 50 மருத்துவக் கல்லூரிகளை தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில், இந்தாண்டு இறுதியில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ள தெலுங்கானாவுக்கு மட்டும் 12 புதிய மருத்துவ கல்லூரி தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று, தமிழகத்தில் 3 தனியார் மருத்துவ கல்லூரிகள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சென்னை பிஎஸ்ஜி அறக்கட்டளை, பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்வி அறக்கட்டளை சார்பில் புதிய மருத்துவ கல்லூரிகள் அமைக்கப்பட உள்ளது. மேலும், ஈரோடு வாய்க்கால்மேட்டில் நந்தா மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை அறக்கட்டளை சார்பில் மருத்துவ கல்லூரி அமைகிறது. இதன் மூலம்



இவ்வாண்டு தலா 150 எம்பிபிஎஸ் இடங்களுடன் 3 தனியார் மருத்துவ கல்லூரிகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தேசிய மருத்துவ ஆணையத்தின் (என்.எம்.சி) இளங்கலை மருத்துவக் கல்வி வாரியத்தின் ஆய்வுகளின் போது, பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளை சரியாக பின்பற்றவில்லை எனக் கூறி நாடு முழுவதும் உள்ள 38 மருத்துவக் கல்லூரிகளின் அங்கீகாரம் கடந்த இரண்டரை மாதங்களில் திரும்பப் பெறப்பட்டது. மேலும், 102 மருத்துவக் கல்லூரிகளுக்குக் காரணம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

இதில், 38 மருத்துவக் கல்லூரிகளில், 24 என்எம்சியிடம் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது தொடர்பாக முறையிட்டுள்ளன, 6 மருத்துவ கல்லூரிகள் சுகாதார அமைச்சரை அணுகியுள்ளன. அங்கீகாரத்தை இழந்த கல்லூரிகள் ஒருமுறை என்எம்சியிடம் முறை யிடவும், பின்னர் குறைபாடுகளை சரிசெய்த பிறகு சுகாதார அமைச்சகத்திடம் முறை யிடவும் அனுமதிக்கப்படுகிறது.




கல்லூரிகள் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு பின்பற்றவில்லை என்றும், சிசிடிவி கேமராக்கள், ஆதார் இணைக்கப்பட்ட பயோமெட்ரிக் வருகை நடைமுறைகள் மற்றும் ஆசிரியர் பட்டியல்கள் தொடர்பான பல குறைபாடுகள், கமிஷனின் யுஜி போர்டு நடத்திய ஆய்வுகளின் போது கவனிக்கப்பட்டதாக தெரிவிக்கின்றனர்.

2014-ம் ஆண்டு முதல் நாட்டில் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளதாக அரசுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 2014ஆம் ஆண்டுக்கு முன்பு 387 ஆக இருந்த மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 69 சதவீதம் அதிகரித்து தற்போது 654 ஆக அதிகரித்துள்ளது என்று மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சர் பாரதி பிரவின் பவார் பிப்ரவரியில் ராஜ்யசபாவில் தெரிவித்தார்.

மேலும், 2014க்கு முன் 51,348 ஆக இருந்த எம்பிபிஎஸ் இடங்களின் எண்ணிக்கை 94 சதவீதம் அதிகரித்து, தற்போது 99,763 ஆகவும், முதுகலை பட்டப்படிப்பு இடங்களின் எண்ணிக்கை 107 சதவீதம் அதிகரித்து, 2014க்கு முன் 31,185 ஆக இருந்த நிலையில் இப்போது 64,559 ஆகவும் அதிகரித்துள்ளது. நாட்டில் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க, அரசு மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையையும், அதைத் தொடர்ந்து, எம்பிபிஎஸ் இடங்களையும் அதிகரித்துள்ளது.

# தமிழ் நாட்டிற்கு பெருமை சேர்த்ததா புதிய நாடாளுமன்ற கட்டிடம்?

புதிய நாடாளுமன்றக் கட்டடம் என்பது ஒரு வரலாற்று நிகழ்வு. நாடாளுமன்றத்துக்குப் புதிய கட்டடம் தேவை என்று கோரிக்கை வைத்தது காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசின் மக்களவைத் தலைவராக இருந்த மீரா குமார். 2012-இல் மீரா குமாரும், 2016-இல் மக்களவைத் தலைவராக இருந்த சுமித்ரா மகாஜனும் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளைப் பெற்று புதிய கட்டடத்துக்கான முடிவு எடுக்கப்பட்டது.

முந்தைய நாடாளுமன்றக் கட்டடம், 1920-இல் கட்டத் தொடங்கி 1927-இல் திறந்து வைக்கப்பட்டது. காலத்தின் பாதிப்பு அந்தக் கட்டடத்தில் தெரியத் தொடங்கி ஆண்டுகள் பல கடந்துவிட்டன. 1985-இல் காங்கிரஸ் தலைவர் சிந்தாமணி பாணிகிரகி தலைமையில் அமைந்த நாடாளுமன்றக் குழு, கட்டடத்தில் ஆங்காங்கே விரிசல் விழத் தொடங்கி இருப்பதைச் சுட்டிக்காட்டி இருந்தது. நவீன தொழில்நுட்பங்களான ஏசிக்கள், நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்பு போன்றவை, பழைய கட்டடத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தி இருக்கின்றன. கடந்த 53 ஆண்டுகளாக மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. 1951-இல் 36.1 கோடியாக இருந்த இந்தியாவின் மக்கள்தொகை, இப்போது ஏறத்தாழ 140 கோடியை எட்டி, உலகில் மிக அதிகமான மக்கள்தொகை கொண்ட நாடாக உயர்ந்திருக்கிறது. அதற்கேற்றாற்போல, மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதுதான் நியாயம். அதற்கு புதிய நாடாளுமன்றக் கட்டடம் அவசியம்.

நாடாளுமன்றத்தின் மைய மண்டபம் நிரம்பி வழிகிறது. அவ்வப்போது உறுப்பினர்களுக்கு இடைக்காலமாக நாற்காலிகள் போட வேண்டிய நிலைமை. புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் 888 மக்களவை உறுப்பினர்களுக்கும், 384 மாநிலங்களவை உறுப்பினர்களுக்கும் வசதியாக அமர வழிகோலப்பட்டிருக்கிறது. அது வரவேற்புக்குரியது தானே?

நாடாளுமன்றக் கட்டடத்தில் தமிழர்களின் பங்களிப்பு முன்னுரிமை பெறுவது பெருமிதம் அளிக்கிறது. செங்கோலில் நந்திதேவர் உருவம் இருந்தது. மகாலட்சுமியின் உருவம் இருந்தது. அதனைப் பெற்றுக் கொண்டதிலும், சைவ சமயத் துறவிகளின் கோளறு பதிகப் பாடல் ஒலிப்பதிலும் கலாசாரத்தை ஆட்சியாளர்கள் பிரதிபலிக்கத்தான் வேண்டும். சிறுபான்மை மக்களின் உணர்வுகளை மதிப்பதும், அவர்கள் இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தப்படாமல இருப்பதும்தான் மதச்சார்பின்மை. இந்திய ஜனநாயகத்துக்கு புதியதொரு நாடாளுமன்றம் நம்மால் கட்டப்பட்டிருக்கிறது, அதை வரவேற்போம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் தனது

# கைதி அமைச்சராக ஏன் தொடர வேண்டும்? செந்தில் பாலாஜி குறித்து
# எடப்பாடி பழனிசாமி கேள்வி!

சிறை கைதி எண் கொடுத்த பிறகும் செந்தில் பாலாஜி அமைச்சராக தொடர்வது தவறு என எடப்பாடி பழனிசாமி தெரி வித்திருந்தார்.

மாற்றுக்கட்சியினர் பலர் அங்கிருந்து விலகி அதிமுகவில் இணைந்தார். இந்த விழாவில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், கொள்கை அடிப்படையில்தான் கூட்டணி அமைத்தது அதிமுக.

எனவே நாங்கள் யாருக்கும் அடிமை யில்லை. திமுகதான் பிறருக்கு அடிமையாக இருக்கிறது. தமிழகத்தில் பிரதான எதிர்க்கட்சி என்றால் அது அதிமுகதான். தமிழகத்தில் 25 லோக்சபா தொகுதிகளில் பாஜக வெல்லும் என மத்திய அமைச்சர் அமித்ஷா கூறியது அவரது கருத்து.

அது போல் நான் சொல்கிறேன். தமிழகம், புதுவையில் 40 லோக்சபா தொகுதிகளில் அதிமுக வெல்லும் சூழல் பிரகாசமாக இருக்கிறது. ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜி அமைச்சராக தொடர்வது என்பது தவறு. அவருக்கு கைதி எண் கொடுத்தாகிவிட்டது.

அவர் மருத்துவமனையில் இருந்தாலும் கிட்டதட்ட போலீஸார் பாதுகாப்பில்தான் இருக்கிறது. ஏற்கெனவே திமுக ஆட்சியில் ஆலடி அருணா, நில அபகரிப்பு வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட என்கேகேபி ராஜா , அதிமுக ஆட்சியில் அக்ரி கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட அமைச்சர்கள் மீது புகார் வந்த போது அவர்கள் எல்லாம் அமைச்சரவை யிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.




இதுதான் தமிழகத்தின் வரலாறு. எனவே அரசியல் நாகரிகம் கருதி முதல்வர் ஸ்டாலின் செந்தில் பாலாஜியை அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும். இதைத்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஒரு கைதியை எதற்காக முதல்வர் போய் சந்திக்கிறார்.

இது ஜனநாயக நாடு யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம். எனவே விஜய் அரசியலுக்கு வருவதையும் நான் அப்படித்தான் பார்க்கிறேன். நீட் தேர்வை பொருத்தமட்டில் 2010 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் தேதி அறிவிக்கை வெளியானது. அப்போது யாருடைய ஆட்சி இருந்தது.

திமுக - காங்கிரஸ் கூட்டணி ஆட்சிதான் மத்தியில் இருந்தது. மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக காந்தி செல்வன்தான் இருந்தார். நீட் வேண்டாம் என்பதுதான் அதிமுகவின் முடிவு. இதற்காக நீதிமன்றம் வரை சென்று போராடியுள்ளோம் என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

# கடற்கரையைத் தூய்மைப்படுத்த பொதுமக்கள் அதிக அளவில் பங்கேற்க வேண்டும்:

## மத்திய புவி அறிவியல் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு





கடற்கரைகளைத் தூய்மைப்படுத்த பொதுமக்கள் அதிக அளவில் பங்கேற்க வேண்டும் என மத்திய புவி அறிவியல் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கேட்டுக்கொண்டார். உலகப் பெருங்கடல்கள் தினத்தை ஒட்டி சென்னை பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரையை தூய்மைப்படுத்தும் நிகழ்வில் கலந்து கொண்ட போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்தியா 7,500 கி.மீ. க்கும் அதிகமான கடற்கரையைக் கொண்டுள்ளது எனவும், நாம் பெருங்கடல்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களுடன் நேரடி மற்றும் தீவிரத் தொடர்பை கொண்டுள்ளோம் எனவும் தெரிவித்தார். மேலும், சென்னை அழகிய கடற்கரையைக் கொண்டுள்ளது. நாம் கடற்கரையைப் பேணிகாக்கவும் கடல்வாழ் உயிரினங்களின் நீடித்த வாழ்விற்கும் மிக முக்கிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம் என்றும் அவர் கூறினார். மேலும், இன்று கடற்கரைத் தூய்மைப்படுத்தும் நிகழ்வில் பல்வேறு முக்கிய நிறுவனங்கள் இணைந்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது என்றும் தெரிவித்தார். இந்தியா கடற்கரைப் பாதுகாப்பில் உலக அளவில் முக்கியப் பங்கு வகித்து வருகிறது என்று கூறிய அமைச்சர், இந்தியாவை போன்றே ஆர்டிக் மற்றும் அண்டார்டிக் பெருங்கடல் பகுதியில் பல்வேறு சிக்கல்களை நார்வே சந்தித்து வருகிறது என்றும் பெருங்கடல்கள் பாதுகாப்பில் இந்தியாவும் நார்வேயும் இணைந்து செயல்பட ஆவலுடன் உள்ளது என்றும் அமைச்சர் கூறினார். கடற்கரைகளை சுத்தப்படுத்தும் இதுபோன்ற நிகழ்வுகளின் மூலம் நேர்மறையான மாற்றங்கள் ஏற்படுவதைக் காண முடிகிறது எனவும், கடற்கரையோரம் வாழும் மீனவர்கள், கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு இல்லாமல் நீடித்த வாழ்விற்கான இலக்கை நிர்ணயித்து செயல்பட வேண்டும் என்றும் கடற்கரைப் பாதுகாப்புக் குறித்து சென்னை மட்டுமல்லாமல், இந்தியாவின் அனைத்து கடற்கரை நகரங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மத்திய புவி அறிவியல் துறை செயலர் திரு. ரவிச்சந்திரன், தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் திரு. ராமதாஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# கருணாநிதி 100: தமிழக அரசியலில் 80 ஆண்டுகாலம் அரசாட்சி செய்த திருக்குவளை முத்துவேலர் கருணாநிதி




திமுகவின் முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களுக்கு இன்று 100ஆவது பிறந்தநாள். கிட்டத்தட்ட 80 ஆண்டுகள் வாழ்க்கையில், தமிழக அரசியலில் சிறப்பாக கொடிகட்டிப்பறந்தவர். திமுகவில் சுமார் 50 ஆண்டுகள் தலைவராகவும், தமிழக அரசியலில் 80 ஆண்டுகள் கோலோச்சிய பெருமை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவை.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள திருக்குவளைதான் கருணாநிதி பிறந்த ஊர். கடந்த 1924ஆம் ஆண்டில் நாட்டு வைத்தியர் முத்துவேலர், அவரது மனைவியார் அஞ்சுகம் அம்மையாருக்கும் மூன்றாவது குழந்தையாக பிறந்தவர் தான் கருணாநிதி. இவரின் இயற்பெயர் தட்சணாமூர்த்தி.

தன்னுடைய ஆரம்பக் கல்வியை திருக்குவளையில் படித்தவர், அதன்பின் உயர்நிலைக்கல்வியை திருவாரூர் போர்டு உயர்நிலைப் பள்ளியில் படித்து முடித்தார். பள்ளிப்பருவத்திலிருந்தே படிப்பு, கவிதை, பேச்சாற்றல் என பன்முகத்திறமை கொண்டவராக இருந்துள்ளார். தான் எட்டாம் வகுப்பு படிக்கும்போது மேடையில் துவங்கிய பேச்சு, 80 ஆண்டுகாலம் தமிழக அரசியலையே புரட்டிப்போட்டுள்ளது.

சிறிய வயதிலிருந்தே போராட்ட குணமும், ஆராய்ந்து பேசக்கூடிய கல்வியறிவும், ஏற்றத்தாழ்வுகளை விரும்பாதவராகவும், சிறிய வயது முதல் தன்னுடைய கொள்கையில் பிடிவாதமாகவும் இருந்துள்ளார். தன்னுடைய தகப்பனார் ஏற்பாடு செய்திருந்த இசைபயிற்சி வகுப்பில் ஏற்றத்தாழ்வுகளை உணர்ந்தவர், அங்கு முற்றிலுமாக செல்வதை தவிர்த்து விட்டார். 1938இல் சென்னை மாகாண முதல்வராக இருந்த ராஜாஜி, இந்தி மொழியை கட்டாயப் பாடமாக்கி, ஆணையை வெளியிட்ட போது, தமிழகம் முழுவதும் நீதிக்கட்சி தலைவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது 7ஆம் வகுப்பு பயின்று கொண்டிருந்த கருணாநிதி, தமிழ்க்கொடியை கையில் பிடித்தவாறு, இந்தி திணிப்புக்கு எதிராக போராடி தன்னுடைய இந்தி ஆசிரியரிடமும், அடிவாங்கினார். இந்த இளம் சூரியன் தான் வருங்காலத்தில், தமிழகத்தையே ஆளக்கூடிய, இமாலய சூரியனாக உருவெடுக்கும் என்று பலருக்கும் தெரிந்திருக்காது.




தன்னுடன் படித்த மாணவர்களை இணைத்து இந்தி எதிர்ப்பு போராட்டத்தை நடத்தினார். அதற்காக 'இளைஞர் மறுமலர்ச்சி அமைப்பு' என்ற இயக்கத்தையும் உருவாக்கி, தன் 16 வயதில் "மாணவ நேசன்" என்ற பத்திரிக்கையை துவங்கி நடத்தி வந்தார். இதுதான் தற்போதைய "முரசொலி" பத்திரிகை தோன்ற முக்கிய காரணமாக இருந்தது.

17 வயதில் தனது நண்பர்ளான க.அன்பழகன், இரா.நெடுஞ்செழியன், மதியழகன் உள்ளிட்டோரை இணைத்து, தமிழ்நாடு மாணவர் மன்றம் என்ற அமைப்பை உருவாக்கினார். இதுதான் தற்போதைய திராவிட இயக்கத்தின், முதல் மாணவர் அணியாக கருதப்படுகிறது. கடந்த 1953ஆம் ஆண்டில், கல்லக்குடி என டால்மியாபுரம் ரயில் நிலையத்திற்கு மீண்டும் பெயர் சூட்ட வேண்டும் என்று, தண்டவாளத்தில் தலைவைத்து போராடினார். இதுதான் கலைஞருக்கும், திமுகவிற்கு மிகப்பெரிய புகழைத்தேடித்தந்தது, அரசியலில் கருணாநிதி யார் என்றும் தெரியச்செய்தது. 1957 ஆம் ஆண்டில் குளித்தலை தொகுதியில் திமுக சார்பாக முதன் முதலாக களமிறங்கி வெற்றியும் பெற்று, தமிழக சட்டசபைக்குள் நுழைந்தார். கடந்த 1957 ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தலைச் சந்தித்தபோது கட்சியின் மூத்த தலைவர்களான அண்ணாதுரை, நாவலர் நெடுஞ்செழியன் உள்ளிட்டோர் வெற்றி வாய்ப்பை இழந்தனர். ஆனால், கருணாநிதி மட்டும் குளித்தலை தொகுதியில் வெற்றிப் பெற்றார். அடுத்து மாநகராட்சி தேர்தல் நடந்தது. அதில் தி.மு.க.வின் வெற்றிக்கு உறுதுணையாக கருணாநிதி இருந்தார். அதோடு தேர்தல் நிதியாக 11 லட்சம் ரூபாயை வசூலித்துக் கொடுத்தார்.

மாநகராட்சித் தேர்தல் வெற்றிக் கூட்டத்தில் கருணாநிதியைப் புகழ்ந்து பேசினார் அண்ணாதுரை. அப்போது, அண்ணாதுரை, நான் என் மனைவிக்கு நகை வாங்கக்கூட கடைக்குச் சென்றதில்லை. எனக்கென்றுகூட நான் நகை வாங்க நகைக்கடை ஏறியதில்லை. ஆனால், இன்று மதியம் வேகாத வெயிலில் ஊரெங்கும் அலைந்து கடையெங்கும் தேடி வாங்கி வந்தேன் ஒரு கணையாழி. அந்த கணையாழியை இந்த வெற்றியை ஈட்டித்தந்த என் தம்பி கருணாநிதிக்கு அணிவிக்கிறேன் என்றார். அந்த தங்க மோதிரத்தை கருணாநிதி தனது மரணம் வரைக்குமே கழற்றியதில்லை. கருணாநிதியின் உழைப்பை அங்கீகரித்தவர் அறிஞர் அண்ணா. தமிழ்நாட்டின் பாதிச்சரித்திரத்தை நான் எழுதிவிட்டேன். மீதியை என் தம்பி கருணாநிதி எழுதுவார்" என்று சொன்னதுதான் கருணாநிதிக்கு அண்ணா அளித்த மிகப்பெரிய அங்கீகாரம். அதை நிறைவேற்றிக்காட்டியவர் கருணாநிதி. 1961ஆம் ஆண்டு திராவிட முன்னேற்ற கழகத்தின் பொருளாளராக நியமிக்கப்பட்டார். 1967 ஆம் ஆண்டு தமிழக அரசின் பொதுப்பணித்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். தமிழகத்தை 5 முறை முதல்வராக ஆட்சிசெய்த பெருமை கருணாநிதிக்கே உண்டு, இவர் களமிறங்கிய 13 சட்டசபை தேர்தல்களிலும் வெற்றிபெற்று, கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராக பணிபுரிந்த பெருமை கலைஞருக்கு மட்டுமே உண்டு. 1969 ஆம் ஆண்டு திமுகவின் தலைவராகவும், தமிழக முதல்வராகவும் பதவியேற்றார். 1971ஆம் ஆண்டு 2ஆம் முறை தமிழக முதல்வராக பதவியேற்றார் 1989 ஆம் ஆண்டில் 3 ஆவது முறையாக தமிழக முதல்வரானார். 1996 ஆம் நான்காவது முறை முதல்வர் பதவி வகித்தார். 2006 ஆம் ஆண்டு ஐந்தாவது முறை தமிழகத்தில் முதல்வராக இருந்தார்.

மெட்ராஸ் ஸ்டேட் என்பதை தனது ஆட்சிக்காலத்தில் தமிழ்நாடு என மாற்றினார். சுதந்திர தினத்தன்று ஆளுநர் கொடியேற்றும் முறையை, முதல்வர்கள் கொடியேற்றலாம் என்ற புதுமையைத் தந்தவர். மூன்றாம் பாலினத்தவரை திருநங்கைகள் என்றும், விதவைப்பெண்களை கைம்பெண்கள் என்றும் உடல் ஊனமுற்றவர்களை மாற்றுத்திறனாளிகள் என்று அழைத்தவர். திமுகவில் சுமார் 50 ஆண்டுகள் தலைவராகவும், தமிழக அரசியலில் 80 ஆண்டுகள் கோலோச்சிய பெருமை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவை. தமிழக மக்களாலும் திமுக தொண்டர்களாலும் கலைஞர் என அன்போடு அழைக்கப்பட்டவர், பொதுக்கூட்டத்தில் தொண்டர்களைப் பார்த்து "என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளே" என்று அழைத்தால் எழும் கர ஒலி அடங்க சில நிமிடங்கள் ஆகும். திருக்குவளை முத்துவேலர் கருணாநிதி..சுருக்கமாக திமுக என்பது இவரது கட்சி பெயர் மட்டுமல்ல இவரது பெயரிலேயே இருக்கிறது. இவரது சாதனைகளை சொல்ல ஒரு நூற்றாண்டும் சில பக்கங்களும் மட்டுமே போதாது என்பதுதான் உண்மை.

# கவாச் கருவி தமிழ்நாட்டு ரயில்களில் இல்லையா! ரயில்வே ஊழியர் சங்கம் பதில்!




ஒடிசா மாநிலம் பாலசோரில் சென்னை நோக்கி வந்த கோரமண்டல் ரயில் உள்பட அடுத்தடுத்து மூன்று ரயில்கள் விபத்துக்குள்ளானது. இந்நிலையில், இந்த மூன்று ரயில்களும் எப்படி விபத்துக்குள்ளானது, ரயில்களில் விபத்துகளை முன்கூட்டியே அறிந்து அதை தடுக்கும் கவாச் கருவி பொருத்தப்பட்டு இருந்ததா அல்லது ரயில்களில் கவாச் கருவி பொருத்தப்படவில்லையா என்ற பல்வேறு சந்தேகங்கள் எழும்புகின்றன.

**கவாச் கருவி என்றால் என்ன?**

கவாச் கருவி என்பது ரயில்களில் பாதுகாப்பு அம்சத்தை திறன்பட மேற்கொள்ள இந்திய ரயில்வேயால் முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு கருவியாகும். தானியங்கி கருவியான கவாச் இந்திய ரயில்களில் ஏற்படும் விபத்துகளை முன்கூட் டியே அறிந்து தடுக்கும் திறன் கொண்டது.

கவாச் கருவியை பொறுத்தவரை அரை கிலோ மீட்டருக்கு முன்பே ஆட்டோ மேட்டிக்காக பிரேக் போட்டு நின்றுவிடும். சென்னை கோரமண்டல் ரயில் வந்து கொண்டிருக்கிறது. அதே டிராக்கில் இன்னொரு ரயில் வந்து கொண்டிருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். இரண்டு ரயில் களிலும் கவாச் கருவி பொருத்தியிருந்தால், இந்நேரம் ஆட்டோமேட்டிக்காக ரயில்கள் ஒரு கிலோ மீட்டர் முதல் அரை கிலோ மீட்டர் தூரத்தில் நின்று இருக்கும்.

அந்த கவாச் கருவியை ஒரு லிமிட்டில் இரண்டு மூன்று செக்சனில் தான் பொறுத்தி இருக்கிறார்கள். எல்லா செக்சனிலும் உள்ள என்ஜினுக்கும் பொறுத்தவில்லை. இதேபோல் tpws என்று அழைக்கப்படும் train protection warning system, ஆக்சிலரி வார்னிங் சிஸ்டம் என பல விஷயங்கள் 15 வருடங்களில் பரிசோதிக்கப்பட்டு இருக்கிறது. இவை எல்லா இடங்களிலும் பொறுத்தப்படவில்லை.

விமான பயணங்களின் போது ஏற்படும் பேரிடர் மற்றும் விபத்துகளை தடுக்க விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அமைப்பு செயல்படுவது போல, ரயில்களில் விபத்துகளை தடுக்க உதவுகிறது.



குளிர்காலத்தில் ஏற்படும் அடர்த்தியான மூடுபனி உள்ளிட்ட பாதகமான சூழ்நிலைகளின் போது ரயில் இயக்கங்களுக்கு உதவுவதோடு, சிக்னல் கோளாறால் ஏற்படும் விபத்துகளை தடுக்கவும் இந்த கருவி உதவுகிறது.

**கவாச் கருவியின் முக்கிய அம்சங்கள்:**

ரயில் பைல்ட்டின் கட்டுப்பாட்டை மீறி ரயில் இயங்கும் நேரத்தில் விபத்துகளைத் தடுக்கவும், மோதல்கள் ஏற்படுவதை தடுக்கும் நடவடிக்கையாக, தானாகவே பிரேக்குகளைப் பயன்படுத்தும் சிறப்பு அம்சம் கவாச் கருவியில் உள்ளது.

மேலும், கவாச் கருவியின் கூடுதல் முக்கிய அம்சங்களாக தானியங்கி பிரேக்குகள், மூடுபனிக் ***காலங்களில் ஏற்படும் பார்வை குறைபாடு,*** அதிவேகம், எல்ஜின் டிரைவருக்கும், கார்டுக்கும் இடையிலான தகவல் தொடர்பு உள்ளிட்ட நிலைகளை துல்லியமாக கொண்டு செல்லும் பணிகளை கவாச் கருவி மேற்கொண்டு வருகிறது.

கடந்த 2022ஆம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் உள்நாட்டு ரயில் பாதுகாப்பு குறித்து நடவடிக்கை எடுக்க அத்மநிர்பார் திட்டத்தின் மூலம் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்த திட்டத்தின் படி முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உலக தரம் வாய்ந்த கவாச் கருவியை இந்திய ரயில்வேயில் 2 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கு பொருத்த திட்டமிடப்பட்டது.

அதன்படி 250 கிலோ மீட்டர் தூரத்திற்கு சோதனை ஓட்டத்தை சேர்த்து, தெற்கு மற்றும் மத்திய ரயில்வேயின் ஆயிரத்து 200 கிலோ மீட்டர் தூரத்திற்கு இந்த கவாச் கருவி பொருத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. முதற்கட்டமாக இந்திய ரயில்வேயில் கவாச் கருவியை 16 கோடியே 88 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக மக்களவையில் ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

முதற்கட்டமாக டெல்லி - ஹவுரா மற்றும் டெல்லி - மும்பை வழித்தடங்களில் கவாச் கருவியை செயல்படுத்தும் முறையை வரும் 2024ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முடிக்க மத்திய அரசு திட்டமிட்டு உள்ளதாக மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்து இருந்தார்.

இந்த ரயில் விபத்திற்கான காரணம் என்ன என்பது குறித்தும் வருங்காலத்தில் இதுபோன்ற மோசமான நிகழ்வுகள் நடைபெறாத வண்ணம் தடுக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்து உள்ளார். தமிழ்நாட்டில் உள்ள ரயில்களில் எத்தனை ரயில்களில் கவாச் சிஸ்டம் பொறுத்தப்பட்டுள்ளது என்பது குறித்து செய்தியாளர் கேள்வி எழுப்பினார். அதற்கு ரயில்வே ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த சூர்ய பிரகாசம் விளக்கம் அளித்தார்.

இந்தியாவில் 70 ஆயிரம் கிலோ மீட்டருக்கு தண்டவாளங்கள் இருக்கின்றன. இதில் 1000 முதல் 2000 கிலோ மீட்டருக்குத்தான் பொருத்தி இருக்கிறார்கள். அதனால் மீதம் இருக்கும் தூரத்திற்கும் பொறுத்தவேண்டும் என்று எங்கள் தொழிற்சங்கம் சார்பாக தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். 3.75 லட்சம் காலியிடங்கள் ரயில்வேயில் உள்ளன. இதில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட காலியிடங்கள் ரயில்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான காலியிடங்கள். இவை இன்னமும் நிரப்பப்படாமல் உள்ளது. லோகோ பைலட், ஸ்டேசன் மாஸ்டர், கார்டு, டெக்னீசியன், சூப்பர்வைசர் உள்பட பல்வேறு பணியிடங்கள் காலியாக உள்ளன என்றார்.

இதனிடையே தமிழ்நாட்டில் உள்ள ரயில்களில் எத்தனை ரயில்களில் கவாச் சிஸ்டம் பொறுத்தப்பட்டுள்ளது என்பது குறித்து செய்தியாளர் கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளித்த சூர்ய பிரகாசம், தமிழ்நாட்டில் உள்ள ரயில்களில் அப்படி கவாச் சிஸ்டம் பொறுத்தப்பட்டதாக தகவல்கள் இல்லை. வந்தே பாரத் ரயில்களில் மட்டும் கவாச் சிஸ்டம் இருப்பதாக எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதேநேரம் கும்மிடிப்பூண்டி செக்சினில் ஓடும் சில ரயில்களில் மட்டும் tpws என்று அழைக்கப்படும் train protection warning system பொருத்தப்பட்டு இருக்கிறது. அக்சிலரி வார்னிங் சிஸ்டம் போன்றவை பரிசோதனை அடிப்படையில் சில இடங்களில் பொறுத்தப்பட்டுள்ளது. எல்லா இடங்களிலும் பொறுத்தப்படவில்லை. பொறுத்தப்பட்ட இடங்களில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. 95 சதவீதம் இடங்களில் இதுபோன்று விபத்துக்களை தடுக்கும் சிஸ்டத்தை பொருத்தியதாக எங்களுக்கு தகவல் இல்லை என்று கூறினார்.

# கிண்டி கலைஞர் நூற்றாண்டு நினைவு மருத்துவமனை:

## திறந்து வைத்தார் முதல்வர் ஸ்டாலின்



ரூ.240 கோடியில் சுமார் 1,000 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்ட கிண்டி கலைஞர் நூற்றாண்டு நினைவு பன்னோக்கு மருத்துவமனையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் 100வது பிறந்தநாள் விழா இந்த ஆண்டு சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இந்நிலையில், பல்வேறு சிறப்பு திட்டங்களை தமிழக அரசு அறிவித்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக கிண்டியில் பன்னோக்கு மருத்துவமனை அமையும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியிருந்தார். ஆளுநரின் உள்நோக்கம்.. செந்தில் பாலாஜி வழக்கு இருப்பது உண்மைதான்.. அதுக்காக.. கொந்தளித்த திருமாவளவன் இதற்காக ரூ.230 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு சென்னை கிண்டி கிங்ஸ் மருத்துவமனை வளாகத்தில் மருத்துவமனை கட்டப்பட்டு வந்தது. இந்த மருத்துவமனை சுமார் 1,000 படுக்கைகளுடன், அதிநவீன வசதிகளுடன் தரைதளம் மற்றும் 6 மேல் தளங்கள் பிரமாண்டமாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதில், இதயம், நெஞ்சகம், சிறுநீரகம், மூளை நரம்பியல், ரத்த நாளங்கள், குடல் - இரைப்பை, புற்றுநோய் ஆகிய பிரிவுகளுக்கான சிறப்பு அறுவை சிகிச்சை துறைகளும் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த மருத்துவமனை ஜூன் 3ம் தேதி திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதனை திறந்து வைக்க ஏற்கெனவே குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை கடந்த ஏப்ரல் மாதம் 28ம் தேதி நேரில் சென்று அழைப்பு விடுத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். ஆனால் குடியரசுத் தலைவர் செரிபியாவுக்கு சென்றுவிட்டதால் மருத்துவமனை திறப்பு தேதி தள்ளி போனது.

குடியரசுத் தலைவர் தற்போது நாடு திரும்பியுள்ள நிலையில், மருத்துவமனை திறப்பு குறித்த எந்த வித பதிலும் குடியரசுத் தலைவர் அலுவலகத்திலிருந்து கிடைக்கவில்லை. எனவே இந்த மருத்துவமனையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சிக்காக மருத்துவமனை வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் பங்கேற்றுள்ளனர்.

# நமது முன்னோர்கள் சொன்னதை செய்யுங்க!

*1.* பாக்குற மரத்திலெல்லாம் மஞ்சத் துணிய சுத்தி பூ பொட்டு வச்சிருந்த வரைக்கும் ஒரு பயலும் மரத்த வெட்டாமத்தான் இருந்தான்.

பனைமரம் கிழே பனையடி கருப்பு
ஆலமரம் கிழே ஆலடி கருப்பு
வேப்பமரம் கிழே வேம்படி கருப்பு
மாமரம் கிழே மாவடி கருப்பு
நாவல் மரம் கிழே நாவலடி கருப்பு
இப்படி சொல்லி கிட்டே போகலாம்.

என்றைக்கு இதெல்லாம் மூட நம்பிக்கைன்னு கூவ ஆரம்பிச்சானோ அன்றைக்கே இருக்குற மரத்த பூராத்தையும் வெட்ட ஆரம்பிச்சிட்டன்.

*2.* ஆல மரத்துக்கு கீழேயும், அரச மரத்துக்கு கீழேயும் பிள்ளையார வச்சி வழிபட்டுகிட்டு இருக்கும் போதெல்லாம் மனுச மக்க சுத்தமான காத்த சுவாசிச்சிட்டு இருந்தான். இதையெல்லாம் மூடநம்பிக்கைன்னு என்றைக்கு பினாத்த ஆரம்பிச்சானோ அன்றைக்கே சுத்தமான காத்த தேடி ஓடிட்டு இருக்கான்.

*3.* விளையுற நிலத்த சாமியா நினைச்சு பூஜை பண்ணிட்டு இருந்தப்போ மனுஷ மக்க சுத்தமான இயற்கையான சாப்பாட்ட சாபிட்டுட்டு ஆரோக்கியமா இருந்தான். இதையெல்லாம் மூடநம்பிக்கைன்னு என்றைக்கு பொலம்ப ஆரம்பிச்சானோ அன்றைக்கே இரசாயன சாப்பாட சாப்பிட்டுட்டு ஆஸ்பத்திரிக்கு ஓடிட்டு இருக்கான்.

*4.* வீட்டுக்கு முன்னாடி கோலம் போடுறப்பவும், சூடம் ஏத்துறப்பவும், சாணியால வாச தொளிக்குறப்பவும், விளக்கு ஏத்துறப்பவும் இருந்த நோய் நொடியில்லாத வாழ்க்கை, இதையெல்லாம் மூடநம்பிக்கைன்னு இவன் நினைக்க ஆரம்பிச்ச உடனே எதிர்ப்பு சக்தி குறைஞ்சு துவண்டு போயிட்டான்.




*5.* நாங்கெல்லாம் பய பக்தியா சாமி கும்பிடுறவரைக்கும் ஒரு முதியோர் இல்லமும் இல்லாமல் இருந்தது, மனுஷ மக்களும் நீதி நேர்மையோடு வாழ்ந்து வந்தனர்.

இதையெல்லாம் என்றைக்கு மூட நம்பிக்கைன்னு பேசினானோ அன்றைக்கு பெத்த தாய் தந்தையை முதியோர் இல்லத்தில் கொண்டு போய் தள்ளிட்டான்.

இதெல்லாம் கொஞ்சம்தான்...
இனிமேலாவது திருந்த பாருங்க!

# கோபக்கார முனிவர்

சிறுகதை



பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன், ஒரு காட்டில் ஒரு முனிவர் கடுந்தவம் செய்து வந்தார். அந்தப் பக்கம் வந்த இரு காட்டுவாசிகளில் ஒருவன், திடீரென மயக்கம் அடைந்து கீழே விழுந்து விட்டான். என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்த மற்றொருவன், தவத்திலிருந்த முனிவரை எழுப்பி உதவி கேட்டான். தன் தவம் கலைந்த கோபத்தினால் முனிவர் காட்டுவாசியை சாம்பலாகப் போகும்படி சபித்தார். அந்தக் கணமே அந்தக் காட்டுவாசி எரிந்து சாம்பலாக, மயக்கம் தெளிந்து எழுந்த மற்றொருவன் தனது நண்பனின் நிலையைக் கண்டு கதறி அழுதான்.

இதற்குள் கோபம் தணிந்த முனிவரிடம், மற்றொரு காட்டுவாசி சாபத்தை நீக்குமாறு வேண்டினான். அதற்கு முனிவர், எனக்கு சாபம் கொடுக்கத் தெரியுமே தவிர, சாபத்திலிருந்து மீட்கத் தெரியாது. நான் என் குருவிடம் சென்று அதைக் கற்று வருகிறேன். நீ அதுவரை உன் நண்பனின் சாம்பலை பத்திரமாகப் பாதுகாத்து வா! என்று சொல்லிவிட்டு, தன் குருவைத் தேடிச் சென்றார் முனிவர். தன் குருவிடம் சென்று நடந்தவற்றை விளக்கி பரிகாரம் கேட்டார் முனிவர். மனிதனின் முதல் விரோதி அவனது கோபம்தான். நீ கொடுக்கும் சாபத்தினால் உன் தவவலிமை குறைந்து விடும். உன் தவவலிமை முழுதும் தியாகம் செய்தால் உன் சாபத்தைத் திரும்பப் பெறலாம்! என்றார். அதற்கு இணங்காமல் வேறு யோசனை சொல்லும்படிக் கேட்டார்.

குரு, கந்தபுரத்தில் சுந்தரன் என்ற புண்ணியவான் இருக்கிறான். அவன் இல்லறத்தில் இருப்பவன். அவனிடம் சென்று அவன் புண்ணியத்தில் ஒரு பகுதியை தானமாகப் பெற்றுக்கொள். அதைக் கொண்டு அந்தக் காட்டுவாசியை உயிர்ப்பிக்கலாம் என்றார். முனிவர், அந்த சுந்தரனைத் தேடிச் சென்றார். செல்லும் வழியில் மிக அழகான ஒரு இளம் பெண் தென்பட்டாள். அவள் அழகிலே மயங்கிப் போய் அவளையே உற்றுப் பார்க்க, அதனால் கோபமடைந்த அந்தப் பெண், முனிவரான நீ என் போன்ற பெண்ணை இப்படி உற்றுப் பார்க்கலாமா? உனக்கு வெட்கமாக இல்லையா? என்றுகேட்டதும், முனிவருக்கு கடுங்கோபம் உண்டாயிற்று.

அடி பெண்ணே! உன் அழகினால் தானே உனக்கு இவ்வளவு கர்வம்? நீ அழகற்ற அவலட்சணமான பெண்ணாக மாறுவாய்! என்று சபிக்க அந்தப் பெண்ணும் அவ்வாறே மாறிவிட்டாள். பிறகு முனிவர் கந்தபுரத்தை அடைந்தார். வழியில் ஒரு இளைஞனிடம்

சுந்தரனின் வீட்டுக்கு செல்ல வழி கேட்டார். ஆனால் அவன், சுந்தரனின் பெண் மிக அழகானவள். அதனால்தான் அவன் வீட்டுக்கு வழி கேட்கிறாயா? உன்னைப் போன்ற முனிவருக்கு இது தேவையா? என்று திமிராகக் கேட்டான். அவனை ஊமையாக வேண்டும் என்று முனிவர் சபித்துவிட்டு சுந்தரனின் வீட்டைக் கண்டு பிடித்தார்.

முனிவரை சுந்தரன் வரவேற்று அமரச் செய்தார். என் குரு தங்களை ஒரு புண்ணியவான் என்றார். நீங்கள் அப்படி என்ன தவம் செய்து, என் குருவே புகழும்படி புண்ணியம் சம்பாதித்தீர்கள்? என்று கேட்டார். காலையில் எழுந்து என் நித்திய கடன்களை முடித்து விட்டு, வீட்டு வேலைகளிலும் வெளி வேலைகளிலும் பங்கேற்கிறேன். எல்லாருக்கும் என்னால் இயன்ற உதவிகளைச் செய்கிறேன். கோபம், பொறாமை, ஆசை இவற்றை விட்டொழித்து மனதினாலும், வாக்கினாலும், உடலினாலும் பலருக்கும் நன்மை புரிகிறேன் என்றான் சுந்தரன்.

முனிவர், நீங்கள் கடவுளை தியானம் செய்வது கிடையாதா? என்று சுந்தரனிடம் கேட்டார். கடவுள் என்னிலும் இருக்கிறார். மற்றவர்களிடமும் இருக்கிறார். சகல உயிர்களிலும் உறைகிறார். அவரைத் தனியாக பூஜையோ, தியானமோ ஏன் செய்ய வேண்டும்? மற்றவர்களுக்கு உதவி செய்தாலே, அது கடவுளுக்காக செய்யப்படும் பூஜை, தியானம், தவம் அனைத்தும் ஆகும்! என்றான் சுந்தரன்.

நான் செய்யும் தவமெல்லாம் வீண் வேலை என்று கூறுகிறீரா? என்று கோபமாகக் கேட்டார். சுவாமி! நான் உங்களைப் பற்றியோ, உங்கள் தவத்தைப் பற்றியோ குறை கூறவில்லை. நான் என்னுடைய கருத்தைக் கூறுகிறேன்! என்று பணிவுடன் பதில் கூறினான். சுந்தரன் பணிவுடன் கேட்டும் முனிவருக்கு சுந்தரனின் மேல் கோபம் குறையவே இல்லை. இந்த நிமிடத்திலிருந்து நீ கண்பார்வை இழந்து நடக்க முடியாமல் படுக்கையில் வீழ்வாய்! என்று சாபமிட்டார். ஆனால், சுந்தரனுக்கு ஒன்றுமே ஆகவில்லை. மீண்டும் சுந்தரன் பணிவுடன், சுவாமி! சாந்தம் அடையுங்கள். உங்களைப் போன்ற மகான் கோபம் அடையும்படி நான் பேசியது தவறுதான்! என்று மன்னிப்புக் கேட்டார்.

சுந்தரா! நான் உனக்கு இட்ட சாபம் உனக்குப் பலிக்கவில்லையே ஏன்? என்று கேட்டார். சுவாமி! அப்படியில்லை. காட்டுவாசி, அழகான இளம்பெண், வழியில் கண்ட இளைஞன் ஆகியோருக்கு சாபம் கொடுத்து தங்கள் தவவலியை நஷ்டமாகிவிட்டது. நான் மட்டுமில்லை இனி நீங்கள் யாருக்கு சாபம் கொடுத்தாலும் அது பலிக்காது. போகட்டும் நீங்கள் என்னிடம் பெற வந்த புண்ணியத்தின் ஒரு பகுதியை உங்களுக்கு இப்போது நான் அளிக்கிறேன்.

அந்தப் புண்ணியத்தினால் நீங்கள் சாபமிட்டவர்கள் எல்லாருக்கும் இந்தக் கணத்திலிருந்து சாபம் நீங்கிவிடும். உங்கள் தவவலிமையை இந்த வினாடியிலிருந்து நீங்கள் மீண்டும் பெற்று விட்டீர்கள். நீங்கள் விரும்பினால் இப்போது எனக்கு சாபம் கொடுக்கலாம். அது பலிக்கும்! என்றார். தனது செய்கைகளினால் அவமானம் அடைந்த முனிவர், சுந்தரனுக்கு நன்றி கூறிவிட்டு மௌனமாக தன் குருவைத் தேடிச் சென்றார். வரும் வழியில், தான் சாபமிட்டவர்கள் மறுபடியும் தன் நிலைக்கு மாறி இருப்பதை அவர் கண்டார். தனது குரு சுசாந்தரிடம் நடந்தவற்றைக் கூறி அதற்கு விளக்கம் கேட்டார்.

தவத்தினால் பல சக்திகளை அடையலாம். ஆனால், தன் கடமையைச் சிறப்பாக செய்பவனும், பிறருக்கு உதவி செய்வதையே இலட்சியமாகக் கொண்டவனுமான ஒரு மனிதன் ஒரு தவயோகியை விட அதிகப் புண்ணியம் செய்தவன் ஆகிறான்! என்றார். குருவே! இப்போது சுந்தரன் தான் செய்த புண்ணியத்தை தானம் செய்து விட்டான். ஆகையால் அவனுடைய சக்தியும் குறைந்து விடும் அல்லவா? என்று முனிவர் சந்தேகம் கேட்டார். மற்றவர்களுக்காகத் தன் புண்ணியத்தையே தானம் செய்தால் அதுவே பெரிய புண்ணியம். சுந்தரனின் சக்தி குறையவில்லை. முன்பைவிட இப்போது அதிகமாகி விட்டது! என்றார் முனிவர். கோபத்தால் இனி யாருக்கும் சாபம் இடக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டார்.

# புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்



பிரதமர் திரு நரேந்திர மோடி புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார். அதற்கு முன்பாக, புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் கிழக்கு-மேற்கு திசையை நோக்கிய உச்சியில் நந்தியுடன் கூடிய செங்கோலை பிரதமர் நிறுவினார். விளக்கேற்றி வைத்த அவர், செங்கோல் மீது மலர்களை தூவினார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், ஒவ்வொரு தேசத்தின் வரலாற்றிலும் அழியாத சில தருணங்கள் இருப்பதாக குறிப்பிட்டார். சில தேதிகள் காலத்தின் முகத்தில் அழியாத கையொப்பமாக மாறும். 2023 ஆம் ஆண்டு மே 28 ஆம் தேதி அத்தகைய மறக்க முடியாத ஒரு நாள் என்று பிரதமர் கூறினார். “இந்திய மக்கள் அமிர்தப் பெருவிழாவுக்காக ஒரு பரிசை வழங்கியுள்ளனர்” என்று அவர் கூறினார். இந்த மகத்துவமிக்க நிகழ்வில் அனைவருக்கும் பிரதமர் வாழ்த்து தெரிவித்தார்.

இது ஒரு கட்டிடம் மட்டுமல்ல, 140 கோடி இந்தியர்களின் நம்பிக்கைகள் மற்றும் கனவுகளின் பிரதிபலிப்பாகும் என்று பிரதமர் கூறினார். “இந்தியாவின் உறுதிப்பாட்டை உலகிற்கு எடுத்துரைக்கும் நமது ஜனநாயகத்தின் கோவில் இது, இந்த புதிய நாடாளுமன்ற கட்டிடம் திட்டமிடலை யதார்த்தத்துடன் இணைக்கிறது, கொள்கையை உணர்தல், மன உறுதியை நிறைவேற்றுவது மற்றும் சங்கல்பத்தை சித்தியுடன் இணைக்கிறது. சுதந்திரப் போராட்ட வீரர்களின் கனவுகளை நனவாக்கும் ஊடகமாக

இது அமையும். இது தற்சார்பு இந்தியாவின் சூரிய உதயத்தைக் காணுவதுடன், வளர்ந்த இந்தியாவின் உணர்வைக் காணும். இந்தப் புதிய கட்டிடம் பழங்கால மற்றும் நவீனத்துவம் இணைந்து வாழ்வதற்கு ஒரு எடுத்துக்காட்டு'' என்று பிரதமர் கூறினார்.

''புதிய பாதைகளில் பயணிப்பதன் மூலம் மட்டுமே புதிய மாதிரிகளை நிறுவ முடியும். புதிய இந்தியா புதிய இலக்குகளை உணர்ந்து புதிய வழிகளை வகுத்து வருகிறது. ஒரு புதிய ஆற்றல், புதிய வைராக்கியம், புதிய உற்சாகம், புதிய சிந்தனை மற்றும் ஒரு புதிய பயணம் ஆகியவற்றுடன் புதிய தரிசனங்கள், புதிய திசைகள், புதிய தீர்மானங்கள் மற்றும் ஒரு புதிய நம்பிக்கையும் உள்ளது'' என்று திரு மோடி குறிப்பிட்டார். இந்தியாவின் உறுதியையும், குடிமக்களின் வீரியத்தையும், இந்தியாவில் மனித சக்தியின் வாழ்க்கையையும் உலகம் மரியாதையுடனும் நம்பிக்கையுடனும் நோக்குகிறது என்று பிரதமர் கூறினார். ''இந்தியா முன்னேறும் போது, உலகம் முன்னேறும்'' என்று அவர் குறிப்பிட்டார். புதிய நாடாளுமன்ற கட்டிடம் இந்தியாவின் வளர்ச்சியில் இருந்து உலகின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் என்று பிரதமர் கூறினார்.

புனிதமான செங்கோலை நிறுவியதைக் குறிப்பிட்டுப் பேசிய பிரதமர், பெரிய சோழப் பேரரசில், சேவைக் கடமை, தேசத்தின் பாதையின் அடையாளமாக செங்கோல் காணப்பட்டது என்றார். ராஜாஜி, ஆதீனம் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், இந்த செங்கோல் அதிகார மாற்றத்தின் புனித சின்னமாக மாறியது. இன்று காலை விழாவை ஆசிர்வதிக்க வந்த ஆதீன துறவிகளை பிரதமர் மீண்டும் வணங்கினார். ''இந்த புனிதமான செங்கோலின் கண்ணியத்தை நாம் மீட்டெடுக்க முடிந்தது நமது அதிர்ஷ்டம். சபை நடவடிக்கைகளின் போது இந்த செங்கோல் நம்மை ஊக்கப்படுத்திக் கொண்டே இருக்கும்'' என்றார் அவர்.

''இந்தியா ஒரு ஜனநாயக நாடு மட்டுமல்ல, ஜனநாயகத்தின் தாயும் கூட'', உலக ஜனநாயகத்திற்கான முக்கிய அடித்தளம் நாடு என்று பிரதமர் குறிப்பிட்டார். ஜனநாயகம் என்பது இந்தியாவில் நடைமுறையில் உள்ள ஒரு அமைப்பு மட்டுமல்ல, அது ஒரு கலாச்சாரம், சிந்தனை மற்றும் பாரம்பரியம் என்று அவர் வலியுறுத்திக் கூறினார். வேதங்களைப் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், அது ஜனநாயகக் கூட்டங்கள் மற்றும் குழுக்களின் கொள்கைகளை நமக்குக் கற்பிக்கிறது என்று எடுத்துரைத்தார். ஒரு குடியரசின் விளக்கத்தைக் காணக்கூடிய மகாபாரதத்தையும் அவர் குறிப்பிட்டார், மேலும் இந்தியா வைஷாலியில் வாழ்ந்து ஜனநாயகத்தை சுவாசித்துள்ளது என்று கூறினார். ''பஸ்வேஸ்வர பகவானின் அனுபவ மண்டபம் நம் அனைவருக்கும் பெருமைக்குரியது'' என்று மோடி மேலும் கூறினார். தமிழகத்தில் கி.பி.900-ம் ஆண்டை சேர்ந்த கல்வெட்டுகளை எடுத்துரைத்த பிரதமர், இன்றைய காலகட்டத்திலும் இது அனைவரையும் வியப்பில் ஆழ்த்துகிறது என்றார். ''நமது ஜனநாயகம் நமது உத்வேகம் ; நமது அரசியலமைப்பு சட்டம் நமது தீர்மானம். இந்தத் தீர்மானத்தின் மிகப்பெரிய பிரதிநிதி இந்திய நாடாளுமன்றம்'' என்று திரு மோடி குறிப்பிட்டார். ஒரு ஸ்லோகத்தை வாசித்த பிரதமர், முன்னோக்கி நகர்வதை நிறுத்துபவர்களை அதிர்ஷ்டம் கைவிடும். ஆனால் முன்னேறிச் செல்வோரை அது கைகொடுத்து உயர்த்தி விடும் என்றார்.

பல ஆண்டுகால அடிமைத்தனத்திற்குப் பிறகு, பலவற்றை இழந்த பிறகு, இந்தியா மீண்டும் தனது பயணத்தைத் தொடங்கி அமிர்த காலத்தை அடைந்துள்ளது என்று பிரதமர் கூறினார். ''அமிர்த காலம் என்பது நமது பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில் வளர்ச்சியின் புதிய பரிமாணங்களை உருவாக்கும் காலகட்டமாகும். இது தேசத்திற்கு ஒரு புதிய திசையை கொடுக்கும் அமிர்த காலம். இது எண்ணற்ற லட்சியங்களை நிறைவேற்றும் அமிர்த காலம்'', என்று ஆவர் தெரிவித்தார். ஜனநாயகத்திற்கான புதிய உயிர்நாடியின் அவசியத்தை ஒரு வசனத்தின் மூலம் அடிக்கோடிட்டுக் காட்டிய பிரதமர், ஜனநாயகத்தின் பணியிடமான நாடாளுமன்றமும் புதியதாகவும் நவீனமாகவும் இருக்க வேண்டும் என்றார்.

இந்தியாவின் செழிப்பு மற்றும்

# சர்வதேச சூரிய சக்திக் கூட்டமைப்பின் 8-வது நிலைக்குழுக் கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது




சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பின் (ஐ.எஸ்.ஏ) எட்டாவது நிலைக்குழுக் கூட்டம் 06.06.20223 அன்று புதுதில்லியில் மத்திய மின்சாரம், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு ஆர்.கே.சிங் தலைமையில் நடைபெற்றது. நேரடியாகவும் காணொலி வாயிலாகவும் என இரண்டு முறைகளிலும் இக்கூட்டம் நடைபெற்றது. பிரான்சும் இதற்கு கூட்டாக தலைமை வகித்தது. உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் சிலர் தில்லியில் நேரில் கலந்து கொண்டனர். காணொலி வாயிலாகவும் சில நாடுகளின் பிரதிநி திகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

உறுப்பு நாடுகளின் செயல்விளக்க திட்டங்கள், சூரிய சக்தித் தொழில்நுட்ப பயன்பாட்டு வள மையம் (ஸ்டார்சி), சூரிய சக்திக் கூட்டமைப்பின் 6வது கூட்டத்துக்கான ஏற்பாடுகள் போன்றவை குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய மத்திய மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு ஆர் கே சிங், தூய எரிசக்தி மாற்றத்திற்காக சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பு தொடர்ந்து அயராது செயலாற்றி வருகிறது என்று குறிப்பிட்டார். எரிசக்தி முறை மாற்றம் என்பது உலகத்திற்கான தற்போதைய தேவை என்று அவர் கூறினார். அதை எவ்வளவு விரைவாக நாம் அடைகிறோம் என்பதே தற்போதைய கேள்வி என்று அவர் தெரிவித்தார்.

சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் மிகப் பெரிய சவால்களாக இருக்கின்றன என்று கூறிய அவர், இந்த சவால்களை எதிர்கொள்ள வேண்டியது அவசியம் என்றார். உலகில் கார்பன் வெளியேற்றத்தை பூஜ்யம் என்ற நிலைக்குக் கொண்டுவர, சில நாடுகள் மட்டுமே தூயஎரிசக்திக்கு மாறுவது போதாது என்று அவர் தெரிவித்தார். வளர்ச்சிக் குறைந்த நாடுகளுக்கு இதில் உதவிகளை வழங்குவதன் மூலமே இந்த சவால்களை எதிர்கொள்ள முடியும் என்று திரு ஆர் கே சிங் கூறினார்.

# இந்தியாவில் நடந்த மோசமான ரயில் விபத்தைக் கண்டு மனம் உடைந்தது: ஜோ பைடன்



இந்தியாவில் நடந்த மோசமான ரயில் விபத்தை கண்டு என் மனம் உடைந்தது என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் இருந்து ஜூன் 2 பிற்பகல் 3.20 மணிக்கு புறப்பட்ட ஷாலிமார் - சென்னை சென்ட்ரல் கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில், இரவு 7 மணி அளவில் ஒடிசாவின் பாலசோர் - பத்ரக் ரயில் நிலையங்கள் இடையே பாஹாநாகா பஜார் பகுதியில் வந்து கொண்டிருந்தது. அப்போது, பிரதான தண்டவாளத்தில் இருந்து இணைப்பு தண்டவாளத்துக்கு ரயில் மாறியுள்ளது. இணைப்பு தண்டவாளத்தில் ஏற்கெனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரக்குரயில் மீது கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் பயங்கர வேகத்தில் மோதியது.

இந்த ரயில் விபத்தில் இதுவரை 288 பேர் பலியாகி உள்ளனர். 1000 பேர் காயமடைந்துள்ளனர். உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள இந்த ரயில் விபத்துக்கு உலகத் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் ஒடிசா ரயில் விபத்துக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஜோ பைடன், 'இந்தியாவில் நடந்த மோசமான ரயில் விபத்தைக் கண்டு என் மனம் உடைந்தது. இந்த விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களுக்கும் என் பிரார்த்தனைகள் உடனிருக்கும்.

குடும்பம் - கலாச்சார ரீதியாக இந்தியா - அமெரிக்கா ஆழமான உறவைக் கொண்டுள்ளன. இவைதான் நம் இரு நாடுகளையும் ஒன்றிணைக்கின்றன. அமெரிக்கா முழுவதும் உள்ள மக்கள் இந்திய மக்களுடன் சேர்ந்து துக்கம் அனுசரிக்கிறார்கள்' என்று தெரிவித்துள்ளார்.

# இந்திய பொருளாதாரம் சரியான பாதையில் செல்கிறதா?



கடந்த நிதியாண்டின் கடைசி காலாண்டில் இந்தியாவின் ஜிடிபி 6.1% என்பது பொருளாதாரம் ஆரோக்கியமாக, சரியான திசையில் நகர்ந்து கொண்டிருப்பதன் வெளிப்பாடு. இது ஒட்டுமொத்த 2022 - 23 நிதியாண்டின் வளர்ச்சி விகிதத்தை 7.2% அளவில் நிறுத்தும். கடந்த நிதியாண்டின் கடைசி காலாண்டில் வேளாண் வளர்ச்சி 4.1%-லிருந்து 5.5%-ஆக அதிகரித்திருக்கிறது. மின்சாரம், எரிவாயு, குடிநீர் விநியோகம், உள்ளிட்ட பல்வேறு சேவைகளும் முந்தைய நிதியாண்டின் 6.7% அளவிலிருந்து 6.9%-ஆக அதிகரித்திருப்பதைப் பார்க்க முடிகிறது. சேவைத் துறையும் வளர்ச்சியை நோக்கி நகர்வது தெரிகிறது. வணிகம், ஹோட்டல் துறை, போக்குவரத்து, தகவல் தொடர்பு, செய்தி பரிமாற்றத் துறை உள்ளிட்டவை 9.1% அளவில் கடந்த நிதியாண்டின் கடைசி காலாண்டில் காணப்பட்டன.

பொருளாதாரத்தின் செயல்பாடுகளை கணிப்பதற்கு இந்திய ரிசர்வ் வங்கி 70 முக்கியமான குறியீகளைக் கையாள்கிறது. அவை அனைத்துமே ஆக்கப்பூர்வ செயல்பாட்டை காட்டுகின்றன. நான்காவது காலாண்டில் அரசு, தனியார் முதலீட்டுச் செலவுகள் வளர்ச்சி விகிதத்துக்கு முக்கியக் காரணம். கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவின் வளர்ச்சியில் குறைந்த அளவே பங்களிப்பு நல்கிய தனியார் முதலீடுகள் அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றன. அதே நேரத்தில், அரசின் செலவினங்கள் குறையாமல் இருப்பதை உறுதிப்படுத்தினால் மட்டுமே வளர்ச்சியைத் தக்கவைக்க முடியும்.

கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையே நுகர்வில் வேறுபாடு காணப்படுகிறது. அதிகரித்த உணவுப் பொருள்களின் விலையால் கிராமப்புறங்களில் நுகர்வுப் பொருள்களுக்கான கேட்பு குறைந்து காணப்படுகிறது. சேவைத்துறையின் வளர்ச்சியால் நகரங்களில் அந்த நிலை இல்லை.

இவையெல்லாம் ஆனாலும், குறைந்தது 6% வளர்ச்சியுடன் ஜி20 நாடுகளில் மிக வேகமாக வளரும் பொருளாதாரமாக இந்தியா இருக்கும்!

# ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பில் உலகின் மிகப்பெரிய தானிய சேமிப்பு கிடங்கு திட்டம்:

## மத்திய அரசு அறிவிப்பு



பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் கடந்த 31ம் தேதி மத்தியஅமைச்சரவை கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்துக்குப் பிறகு அமைச்சர் அனுராக் தாக்குர் நிருபர்களுக்கு பேட்டி யளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

வளர்ந்த நாடுகளில் தானிய உற்பத்தியை விட சேமிப்பு அதிகமாக உள்ளது. இந்தியாவின் ஓராண்டு தானிய உற்பத்தித் திறன் 31 கோடி டன்களாக இருந்தாலும் சேமிப்புத் திறன் 47 சதவீதமாக மட்டுமே உள்ளது.

இதற்கு தீர்வு காண அடுத்த 5 ஆண்டுகளில் கூட்டுறவுத் துறையில் ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பில் 7 கோடி டன் தானிய சேமிப்புத் திறனை உருவாக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இது உலகின் மிகப்பெரிய தானிய சேமிப்பு கிடங்கு திட்டமாகும்.

முதல்கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 10 மாவட்டங்களில் இந்த திட்டம் செயல்படுத்தப்படும். இதன்படி ஒவ்வொரு வட்ட அளவில் 2,000 டன் தானியங்களை சேமிக்கும் கிடங்கு அமைக்கப்படும். முதல்கட்ட திட்டத்தில் கிடைக்கும் அனுபவங்களின் அடிப்படையில் நாடு தழுவிய அளவில் திட்டத்தை செயல்படுத்துவதற்கான நடைமுறைகள் உருவாக்கப்படும்.

தற்போது நாட்டின் தானிய சேமிப்பு 14.5 கோடி டன்களாக உள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் நாட்டின் தானிய சேமிப்பு திறன் 21.5 கோடி டன்களாக அதிகரிக்கும்.

புதிய திட்டத்தின் மூலம் உணவு தானியம் வீணாவது தடுக்கப்படும். நாட்டின் உணவுப் பாதுகாப்பு மேம்படும். விவசாயிகளின் போக்குவரத்து செலவு குறையும். கிடங்குகளில் இருந்து ரேஷன் கடைகளுக்கு தானியங்களை கொண்டு செல்வதற்கான போக்குவரத்து செலவும் குறையும். கிராமங்களில் வேலைவாய்ப்பை பெருக்கும்.

உலகின் மிகப்பெரிய சேமிப்பு கிடங்கு திட்டத்தை செயல்படுத்த மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் உயர்நிலைக் குழு அமைக்கப்படும்.

நாடு முழுவதும் ஒரு லட்சத்துக் கும் மேற்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் (பிஏசிஎஸ்) செயல்படுகின்றன. இவற்றில் 13 கோடிக்கும் அதிகமான விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். புதிய திட்டத்தில் விவசாயிகள் அனைவரும் பயன் பெறுவார்கள். இவ்வாறு அனுராக் தாக்குர் தெரிவித்தார்.

# மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் சிங்கப்பூர் கல்வி அமைச்சருடன் சந்திப்பு:

## கல்வி மற்றும் திறன்மேம்பாட்டில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து பேச்சுவார்த்தை

மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தமது மூன்று நாள் சிங்கப்பூர் பயணத்தின் நிறைவு நாளான 31.05.2023 அன்று அந்நாட்டு கல்வி அமைச்சர் திரு சான் சுன் சிங்க்-கை சந்தித்து பேசினார். கல்வி மற்றும் திறன்மேம்பாட்டில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இருவரும் விரிவாக ஆலோசனை நடத்தினர்.

பள்ளி நிலையில் இருந்தே தொழில் கல்வி மற்றும் திறன் பயிற்சியை வழங்குவதில் சிங்கப்பூருடன் இணைந்து இந்தியா செயல்பட முடியும் என்று திரு தர்மேந்திர பிரதான் கூறினார். தற்போது இரு நாடுகளுக்கும், கல்வித்துறையில் உள்ள ஒத்துழைப்பை மேலும் விரிவுப்படுத்த இரு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டனர்.

இந்தியாவில் நடைபெற்ற ஜி20 கல்விப் பணிக்குழுக் கூட்டங்களில் சிங்கப்பூர் அமைச்சர் பங்கேற்றதற்கு திரு தர்மேந்திர பிரதான் நன்றி தெரிவித்தார். இரு நாடுகளும் இயற்கையான நட்பு நாடுகள் என்றும். இருதரப்பு மற்றும் உலகளாவிய வளத்திற்காக இணைந்து செயல்பட இரு நாடுகளும் உறுதிப்பூண்டுள்ளதாக அவர் கூறினார்.

தமது மூன்று நாள் பயணத்தின் போது, சிங்கப்பூர் தொழில் துறை அமைச்சர், சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் உள்ளிட்டோரையும் திரு தர்மேந்திர பிரதான் சந்தித்துப் பேசினார். அந்நாட்டில் உள்ள பல்வேறு உயர் கல்வி நிறுவனங்களுக்கும் அவர் சென்றார். சிங்கப்பூரில் உள்ள இந்திய வம்சாவளியினர் மற்றும் அங்கு பணிபுரியும் ஐஐடி மற்றும் ஐஐஎம்களில் படித்த முன்னாள் மாணவர்களுடனும் திரு தர்மேந்திர பிரதான் கலந்துரையாடினார்.


## STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT PENA KURAL, TAMIL MONTHLY

### FORM IV (See Rule 8)

1. Place of publication : **7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078.**

2. Periodicity : **Monthly**

3. Printer Name : **NV SIVASHANKAR**
   - (a) Whether Citizen of India : **Yes**
   - (b) Nationality : **Indian**
   - (c) Address : **J.M. PROCESS No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.**

4. Publisher Name : **NV SIVASHANKAR**
   - (a) Whether Citizen of India : **Yes**
   - (b) Nationality : **Indian**
   - (c) Address : **7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078.**

5. Editor Name : **RATHIKA S**

**I, NV SIVASHANKAR, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.**

**Dated: 10.06.2023**

**NV SIVASHANKAR**
**Publisher**

# AISNA-ன் 40வது மாநில மாநாடு




அகில இந்திய சிறு பத்திரிகையாளர்கள் சங்கத்தின் 41வது மாகாண மாநாடு உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் உள்ள பொதுப்பணித்துறையின் விஸ்வேஸ்வரய்யா ஆடிட்டோரியத்தில் முன்னாள் எம்பியும் ஐஸ்னா மாநில தலைவருமான ஜுகல் கிஷோர் மற்றும் AISNA தேசிய பொதுச் செயலாளரும், இந்திய பத்திரிகை கவுன்சில் உறுப்பினருமான திருமதி ஆர்த்தி திரிபாதி ஆகியோரின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நாட்டின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ஹரியானா, ராஜஸ்தான், டெல்லி உள்ளிட்ட தென்னிந்தியாவைச் சேர்ந்த அதிகாரிகளும் அதிக அளவில் பங்கேற்றனர். நிகழ்ச்சியை மூத்த பத்திரிகையாளர் ஸ்வதந்திர மிஸ்ரா நடத்தினார். சங்கத்தின் தேசிய தலைவர் சிவசங்கர் திரிபாதியை (AISNA) உத்தரபிரதேச மாநில தலைவரும், ராஜ்யசபா முன்னாள் எம்பியுமான ஜுகல் கிஷோர் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக அமைச்சர் ஜிதின் பிரசாத், AISNA தேசிய தலைவர் சிவசங்கர் திரிபாதி, தேசிய பொதுச்செயலாளர் ஆர்த்தி திரிபாதி (இந்திய பிரஸ் கவுன்சில் உறுப்பினர்) மற்றும் உ.பி., மாநில தலைவர் AISNA, முன்னாள் எம்.பி., ஜுகல் கிஷோர் ஆகியோர் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர். நிகழ்ச்சியில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை தெரி வித்தனர்.

மாகாண மாநாட்டில் ஸ்ரீராம் (தென்னிந்தியத் தலைவர்), கிரிஷ் சந்திர சர்மா (அரியானா மாநிலத் தலைவர்), பண்டிட் சஞ்




சிப் நாராயண் தாஸ் (அஸ்ஸாம் மாநிலத் தலைவர்), சந்தீப் குமார் தப்துவார் (பீகார் மாநிலத் தலைவர்), சுனில் குமார் பாண்டே (தலைவர், பீகார் மாநிலம்) அகில இந்திய சிறு பத்திரிகையாளர்கள் சங்கம் AISNA. அமைச்சர் புது தில்லி), சிவயோகி மவுரியன் (தமிழ்நாடு மாநிலத் தலைவர்), வினய் டேவிட் (மாகாணத் தலைவர், மத்தியப் பிரதேச ஐஸ்னா), கோரக்பூர் தலைவர் உமேஷ் மிஸ்ரா, ஃபதேபூர் தலைவர் லக்ஷ்மிநாராயண், மாநில அமைச்சர் தேவேஷ் திரிபாதி, பிஜ்னோர் தலைவர் பர்வேஸ் லக்னோவைச் சேர்ந்த அகில், சஞ்சீவ் பஹ்வா, ஆர்.கே.சிங், அரவிந்த் திரிபாதி, மனோஜ் ஷர்மா, அரவிந்த் திவேதி, அமன் சிங், சுனிதா சிங், அமித் சிங், ரீத்தி சிங் உள்ளிட்ட நாட்டின் ஒவ்வொரு மூலை யிலிருந்தும் அலுவலகப் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் அனைத்து உறுப்பினர்களுக்கும் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் அனைத்து மாநில தலைவர்கள், செயற்குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

**நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக துணை முதல்வர் பிரிஜேஷ் பதக் கலந்து கொண்டார்**

AISNA–வின் பங்களிப்பைப் பாராட்டியதுடன், சாத்தியமான அனைத்து உதவிகளையும் உறுதியளித்தார்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகவருகைதந்த உத்தரபிரதேச துணை முதல்வர் பிரிஜேஷ் பதக், பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த அலுவலகப் பணியாளர்கள் மற்றும் உத்தரப் பிரதேசத்தின் அனைத்து அலுவலகப் பணியாளர்களுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கி கவுரவித்தார். நிகழ்ச்சிக்கு தலைமை விருந்தினராக வந்த துணை முதல்வர் பிரிஜேஷ் பதக், யோகேந்திர மிஸ்ராவும் சிவசங்கர் திரிபாதியும் சிறு பத்திரிகையாளர்களை ஒரே மேடையில் அமைப்பதில் கடுமையாக உழைத்ததாகவும், முதல் மாநாடு டெல்லியில் உள்ள மாவலங்கர் ஹாலில் நடைபெற்றது என்றும் கூறினார். அப்போதிருந்து, நிகழ்ச்சி தொடர்ந்து சென்றது மற்றும் நாட்டின் அனைத்து சிறிய மற்றும் நடுத்தர பத்திரிகையாளர்கள் ஒரே இழையில் இணைக்கப்பட்டன.




சிறு பத்திரிகையாளர்கள் சங்கம் அளித்துள்ள 6 அம்ச கோரிக்கை கடிதம் பொறுப்பானவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று துணை முதல்வர் பிரிஜேஷ் பதக் தெரிவித்தார். மை முதல் காகிதம் வரை யிலான பணவீக்கம் விண்ணைத் தொட்டு வருவதாகவும், இதுபோன்ற சூழ்நிலையில் சிறு பத்திரிகைகளை நடத்துவது மிகவும் சவாலான பணி என்றும் அவர் கூறினார். பெரிய பத்திரிகையாளர்களுக்கு எட்டாத சிறிய மற்றும் நடுத்தர பத்திரிகையாளர்களிலிருந்து விஷயங்கள் வெளிவருகின்றன. கிராமத்தின் தெருக்களில் இருந்து எழும் குரல் லக்னோ மற்றும் டெல்லியின் அதிகாரத்தின் தாழ்வாரங்களை அடைந்து ஒரு இயக்கமாக மாறுகிறது. இது சிறிய மற்றும் நடுத்தர பத்திரிகையாளர்கள்

மட்டுமே. AISNA–வின் தேசியத் தலைவர் மற்றும் அலுவலகப் பொறுப்பாளர்களுக்கு நன்றி தெரிவித்து, நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தி முடித்ததற்காக அவர்களை வாழ்த்தி, செய்தித்தாள்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்க உத்தரப்பிரதேச அரசு உறுதிபூண்டுள்ளது என்றார். AISNA தேசிய பொதுச் செயலாளரும், இந்திய பத்திரிகை கவுன்சில் உறுப்பினருமான ஆர்த்தி திரிபாதி மற்றும் தேசியத் தலைவர் AISNA சிவசங்கர் திரிபாதி மற்றும் உத்தரப் பிரதேச மாநிலத் தலைவரும், முன்னாள் எம்பியுமான ஜுகல் கிஷோர் ஆகியோருக்கு துணை முதல்வர் பிரிஜேஷ் பதக் சிறப்பு நன்றி தெரிவித்தார்.

**சிறப்பு விருந்தினராக வந்திருந்த அமைச்சர் ஜிதின் பிரசாத் ஐஸ்னாவின் கடமையை பாராட்டினார்**

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக வந்திருந்த அமைச்சர் ஜிதின் பிரசாத் பேசுகையில், பத்திரிகைகளில் தங்கள் கடின உழைப்புடன் முக்கிய பங்கு வகிக்கின்றன, கிராமத்தில் இருந்து எழும் குரல் மட்டுமே டெல்லியின் அதிகாரத்தின் தாழ்வாரங்களை எட்டுகிறது. அதிகாரிகள் மற்றும் தலைவர்களின் பொறுப்பை சரிசெய்வது நான்காவது தூணின் முக்கிய கடமையாகும், இன்றைய காலகட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர செய்தித்தாள்கள் மட்டுமே முழு ஈடுபாட்டுடன் செயல்படுகின்றன. இதுபோன்ற செய்தித்தாள்களுக்கு அரசின் அனைத்து உதவிகளும் கிடைக்க வேண்டும். இந்த பத்திரிகையாளர்களுக்கு எங்கள் தரப்பில் இருந்து முடிந்த உதவிகளை தொடர்ந்து பெறும். செய்தித்தாள் பக்கங்கள் மற்றும் மையின் பணவீக்கத்தைக் குறிப்பிட்டு, சிறு மற்றும் நடுத்தர பத்திரிகையாளர்களின் போராட்டங்களைப் பாராட்டியதுடன், பத்திரிகையாளர்களின் பக்கங்களிலிருந்து சமூக ஊடகங்களைச் சென்றடையும் செய்தித்தாள்களின் செய்திகளுக்கு நன்றி தெரிவித்தார்.

**AISNA தேசிய தலைவர் 6 அம்ச கோரிக்கைகள் தொடர்பாக துணை முதல்வர் பிரிஜேஷ் பதக்கிடம் மனு அளித்தார்**

அகில இந்திய சிறு பத்திரிகையாளர்கள் சங்கத்தின் தேசியத் தலைவர் சிவசங்கர் திரிபாதி, மற்ற அலுவலகப் பணியாளர்களுடன், அமைப்பின் மாகாண மாநாட்டிற்குச் சென்று, 6 அம்ச கோரிக்கைகள் தொடர்பான குறிப்பாணையை உத்தரபிரதேச துணை முதல்வர் பிரிஜேஷ் பதக்கிடம் தலைமை அளித்தார். பத்திரிக்கையாளர்களின் பாதுகாப்புக்காக, உத்தரபிரதேசத்தில் பத்திரிகையாளர் பாதுகாப்புச் சட்டத்தை அமல்படுத்தியதுடன், பத்திரிகையாளர்களின் குழந்தைகளுக்கு இலவச கல்வி மற்றும் ஐந்து லட்சம் ரூபாய் வரை இலவச சிகிச்சை போன்ற அடிப்படை வசதிகளை வழங்குவதற்கான விஷயமும் மாநில அரசால் வைக்கப்பட்டது. கழக கோரிக்கைகளை மாநில அரசிடம் தெரிவிக்கப்படும் என்று கூறிய துணை முதல்வர், கழகக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக உறுதி அளித்தார்.

AISNA–வின் தேசியத் தலைவர் சிவசங்கர் திரிபாதி, பத்திரிக்கைகளுக்கு விளம்பரம் கிடைக்காதது, ஜிஎஸ்டி வரி விதிப்பு, RNI–யில் உள்ள பிரச்சனைகளுக்கு விரைவான தீர்வு இல்லை, ஒவ்வொரு ஆண்டும் அரசின் விளம்பர பட்ஜெட் குறைப்பு, பத்திரிக்கையாளர்களுக்கு நிதி உதவி இல்லை, பாதுகாப்பு இல்லை போன்ற கடுமையான பிரச்சனைகளை எடுத்துரைத்தார். இப்பிரச்னைகளுக்கு தீர்வு காண, அரசுக்கு மனு கொடுத்தனர். இதையடுத்து ஜிதின் பிரசாத் மற்றும் துணை முதல்வர் பிரஜேஷ் பதக் ஆகியோர் அரசு தரப்பில் இருந்து முழு உத்தரவாதம் அளிப்பதாக அறிவித்தனர்.

**முன்னாள் எம்பி ஜுகல் கிஷோருக்கு பாபாசாகேப் பீம்ராவ் அம்பேத்கர் ரத்னா விருது வழங்கப்பட்டது**

AISNA–வின் மாநிலத் தலைவரும், முன்னாள் எம்பியுமான ஜுகல் கிஷோருக்கு சிறு செய்தித்தாள்கள் சங்கத்தின் மாகாண மாநாட்டில் டாக்டர் பீம்ராவ் அம்பேத்கர் ரத்னா விருது வழங்கப்பட்டது. டாக்டர் பீம்ராவ் அம்பேத்கரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, முன்னாள் எம்பி ஜுகல் கிஷோர், பாபாசாகேப்பின் அடிப்படைக் கொள்கைகளை தன் வாழ்வில் கடைப்பிடிக்க தன்னால் இயன்றவரை முயற்சி செய்துள்ளார்.

# ஒரே குடும்பத்தில் 2 பெண் ஐ.ஏ.எஸ்

## விவசாயியின் மகள்கள் சாதனை




கடலூரில் தங்கை சார் ஆட்சியராக உள்ள நிலையில், அக்காவும் தற்பொழுது ஐஏஎஸ் தேர்வில் தேர்ச்சி அடைந்திருப்பது ஆச்சர்யத்தை ஏற்படுத்தி உள்ளது.

கடலூர் மாவட்டம் பண்ருட்டி அடுத்த மருங்கூர் கிராமத்தை சேர்ந்த முந்திரி விவசாயி ராமநாதன். இவரது மூத்த மகள் சுஷ்மிதா ராமநாதன் UPSC தேர்வில் அகில இந்திய தரவரிசையில் 528 இடத்தில் வெற்றி பெற்று கடலூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். இவரது தங்கை ஐஸ்வர்யா கடந்த 2019ம் ஆண்டு நடைபெற்ற UPSC தேர்வில் தமிழக அளவில் இரண்டாவது இடத்தையும், அகில இந்திய அளவில் 47வது இடத்தையும் பெற்று தற்போது சென்னை பொன்னேரி சார் ஆட்சியராக உள்ளார்.

இதுகுறித்து சுஷ்மிதா செய்தியாளர் களிடம் கூறுகையில், "கிராமத்தில் பிறந்த நான் சிவில் சர்வீஸ் தேர்வுக்கு எழுத வேண்டும். அதற்கு முழுமையாக படிக்கவேண்டும் என ஆர்வம் கூட்டி அடித்தளம் போட்டவர்கள் எனது பெற்றோர்கள் தான். எனக்கு ஆர்வம் அதிகமாக இருந்ததால் போட்டியில் வெற்றி பெற்றுள்ளேன். பெண்களுக்கு கல்வி முக்கியம், கல்வி மூலமாகதான் முன்னேற்றம் அடையமுடியும் என எனது அம்மா தான் முழுமையாக கூறிவந்தார்கள். பெண்கள் வளர்ச்சிக்காகவும், ஊரக வளர்ச்சிக்காகவும் பாடுபடுவதுதான் எனது நோக்கம். கல்வி ஒரு முக்கிய படிகட்டுகள். என்னை போலவே கிராமத்தில் உள்ளவர்கள் அனைவரும் கல்வி பயில வேண்டும். அனைவரும் கல்வி பயில அரசு பல முன்னெடுப்புகளை செய்துள்ளது. முக்கியமாக இலவச புத்தகம், உணவு, உதவி தொகை என பல திட்டங்களை கொண்டுவந்துள்ளது. இதனை பயன்படுத்திகொண்டு கல்வி பயின்று முன்னேற்றம் அடையவேண்டும்.

UPSC தேர்வுக்கு அதிக நேரம் படிக்கவேண்டிய அவசியமில்லை. எந்த ஒரு தேர்வாக இருந்தாலும் குறிகோள்வைத்து ஆர்வத்துடன் படித்தால் வெற்றி நிச்சயம். தனது தங்கை ஐஸ்வர்யா கடந்த 2019 ம் ஆண்டு நடைபெற்ற UPSC தேர்வில் தமிழக அளவில் இரண்டாவது இடத்தையும், அகில இந்திய அளவில் 47வது இடத்தையும் பெற்று தற்போது சென்னை பொன்னேரி சார் ஆட்சியராக உள்ளார்" என்றார்.

# அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியது

1. வருடங்கள் (60)
2. அயணங்கள் (2)
3. ருதுக்கள் (6)
4. மாதங்கள் (12)
5. பக்ஷங்கள் (2)
6. திதிகள் (15)
7. வாஸரங்கள் (நாள்) (7)
8. நட்சத்திரங்கள் (27)
9. கிரகங்கள் (9)
10. இராசிகள் மற்றும் இராசிஅதிபதிகள் (12)
11. நவரத்தினங்கள் (9)
12. பூதங்கள் (5)
13. மஹா பதகங்கள் (5)
14. பேறுகள் (16)
15. புராணங்கள் (18)
16. இதிகாசங்கள் (3)

இவை அனைத்தையும் ஒவ்வொன்றாக பார்ப்போம்.

**வருடங்கள் மொத்தம் அறுபது அவை:**

1. ப்ரபவ
2. விபவ
3. சுக்ல
4. ப்ரமோதூத
5. ப்ரஜோத்பத்தி
6. ஆங்கீரஸ
7. ஸ்ரீமுக
8. பவ
9. யுவ
10. தாது (தாத்ரு)
11. ஈச்வர
12. வெகுதான்ய
13. ப்ரமாதி
14. விக்ரம
15. விஷு
16. சித்ரபானு
17. ஸுபானு
18. தாரண
19. பார்த்திப
20. வ்யய
21. ஸர்வஜித்
22. ஸர்வதாரி
23. விரோதி
24. விக்ருதி
25. கர
26. நந்தன
27. விஜய
28. ஜய
29. மன்மத
30. துன்முகி
31. ஹேவிளம்பி
32. விளம்பி
33. விகாரி
34. சார்வாரி
35. ப்லவ
36. சுபக்ருது
37. சோபக்ருது
38. க்ரோதி
39. விச்வாவஸு
40. பராபவ
41. ப்லவங்க
42. கீலக
43. ஸௌம்ய
44. ஸாதாரண
45. விரோதிக்ருத்
46. பரிதாபி
47. பிரமாதீச
48. ஆனந்த
49. ராக்ஷஸ
50. நள
51. பிங்கள
52. காளயுக்தி
53. ஸித்தார்த்தி
54. ரௌத்ரி
55. துன்மதி
56. துந்துபி
57. ருத்தோத்காரி
58. ரக்தாக்ஷி
59. க்ரோதன
60. அக்ஷய

**அயணங்கள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:**

1. உத்தராயணம்
(தை மாதம் முதல் ஆனி மாதம் வரை உள்ள ஆறு மாத காலம்).
2. தக்ஷிணாயணம்
(ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை உள்ள ஆறு மாத காலம்).

இரண்டு அயணங்கள் சேர்ந்து ஒரு தமிழ் வருடமாகும்.

**ருதுக்கள் மொத்தம் ஆறு வகைப்படும்:**

1. வஸந்தருது (சித்திரை, வைகாசி)
2. க்ரீஷ்மருது (ஆனி, ஆடி)
3.வர்ஷருது (ஆவணி, புரட்டாசி)
4.ஸரத்ருது (ஐப்பசி, கார்த்திகை)
5.ஹேமந்தருது (மார்கழி, தை)
6.சிசிரருது (மாசி, பங்குனி)

இரண்டு தமிழ் மாதங்கள் சேர்ந்தது ஒரு ருது ஆகும்.

**தமிழ் மாதங்கள் பன்னிரண்டு ஆகும்:**

1. சித்திரை (மேஷம்)
2. வைகாசி (ரிஷபம்)
3. ஆனி (மிதுனம்)
4. ஆடி (கடகம்)
5. ஆவணி(சிம்மம்)
6. புரட்டாசி (கன்னி)
7. ஐப்பசி(துலாம்)
8. கார்த்திகை (விருச்சிகம்)
9. மார்கழி (தனுர்)
10. தை (மகரம்)
11. மாசி (கும்பம்)
12. பங்குனி (மீனம்)

**பக்ஷங்கள் இரண்டு வகைப்படும்:**

1. ஸுக்ல பக்ஷம்
(அமாவசை திதி முதல் சதுர்த்தசி திதி வரை)
2. க்ருஷ்ண பக்ஷம்
(பௌர்ணமி திதி முதல் சதுர்த்தசி திதி வரை)

சுக்ல பக்ஷத்தை பூர்வ பக்ஷம் என்றும் வளர்பிறை என்றும் கூறுவர்.

க்ருஷ்ண பக்ஷத்தை அமர பக்ஷம் என்றும் தேய்பிறை என்றும் கூறுவர்.

இரண்டு பக்ஷங்கள் சேர்ந்தது ஒரு தமிழ் மாதம் ஆகும்.

**திதிக்கள் மொத்தம் பதினைந்து வகைப்படும் :**

1. பிரதமை
2. துதியை
3. திருதியை
4. சதுர்த்தி
5. பஞ்சமி
6. ஷஷ்டி
7. சப்தமி
8. அஷ்டமி
9. நவமி
10. தசமி
11. ஏகாதசி
12. துவாதசி
13. திரையோதசி
14. சதுர்த்தசி
15. பௌர்ணமி (அ) அமாவாசை

**வாஸரங்கள் (நாழ்) ஏழு ஆகும் :**

1. ஆதித்யவாஸரம்
2. சோமவாஸரம்
3. மங்களவாஸரம்
4. ஸௌமியவாஸரம்
5. குருவாஸரம்
6. சுக்ரவாஸரம்
7. மந்தவாஸரம் (அ) ஸ்திரவாஸரம்

**நட்சத்திரங்கள் மொத்தம் இறுபத்தி ஏழு ஆகும்:**

1. அஸ்வினி
2. பரணி
3. கர்த்திகை
4. ரோகினி
5. மிருகசீரிஷம்
6. திருவாதிரை
7. புனர்பூசம்
8. பூசம்
9. ஆயில்யம்
10. மகம்
11. பூரம்
12. உத்திரம்
13. ஹஸ்த்தம்
14. சித்திரை
15. சுவாதி
16. விசாகம்
17. அனுஷம்
18. கேட்டை
19. மூலம்
20. பூராடம்
21. உத்ராடம்
22. திருவோணம்
23. அவிட்டம்
24. சதயம்
25. பூரட்டாதி
26. உத்திரட்டாதி 27. ரேவதி

**கிரகங்கள் ஒன்பது ஆகும்:**

1. சூரியன் (SUN)
2. சந்திரன் (MOON)
3. அங்காரகன் (MARS)
4. புதன் (MERCURY)
5. குரு (JUPITER)
6. சுக்ரன் (VENUS)
7. சனி (SATURN)
8. இராகு (ASCENDING NODE)
9. கேது (DESCENDING NODE)

**இராசிகள் மற்றும் இராசிஅதிபதிகள்:**

இராசிகள் பண்ணிரெண்டு ஆகும் ஒவ்வொரு நட்சத்திரமும் நான்கு பகுதியாக (பாகங்கள்) பிரிக்கப்படும், நட்சத்திரங்களின் ஒன்பது பகுதிகள் (பாகங்கள்) சேர்ந்த்து ஒரு இராசி ஆகும்.

**நடசத்திரங்கள், இராசி, இராசி அதிபதி**

அஸ்வினி, பரனி, கர்த்திகை முன் ¼
மேஷம்
செவ்வாய்

கர்த்திகை பின் 3/4, ரோகினி, மிருகசீரிஷம் முன் 1/2
ரிஷபம்
சுக்கிரன்

மிருகசீரிஷம் பின் 1/2, திருவாதிரை, புனர்பூசம் முன் 3/4
மிதுனம்
புதன்

புனர்பூசம் பின் ¼, பூசம், ஆயில்யம்
கடகம்
சந்திரன்

மகம், பூரம், உத்திரம் முன் ¼
சிம்மம்
சூரியன்

உத்திரம் பின் 3/4, ஹஸ்தம், சித்திரை முன் 1/2
கன்னி
புதன்

சித்திரை பின் 1/2, சுவாதி, விசாகம் முன் 3/4
துலாம்
சுக்கிரன்

விசாகம் பின் 1/4, அனுஷம், கேட்டை
விருச்சிகம்
செவ்வாய்

மூலம், பூராடம், உத்திராடம் முன் 1/4
தனுசு
குரு

உத்திராடம் பின் 3/4, திருவோணம், அவிட்டம் முன்1/2
மகரம்
சனி

அவிட்டம் பின் 1/2, சதயம், பூரட்டாதி முன் 3/4
கும்பம்
சனி

பூரட்டாதி பின் 1/4, உத்திரட்டாதி, ரேவதி
மீனம்
குரு

சோதிட சாஸ்திரத்தில் கிரகங்களின் குணம் எந்த தெய்வத்தின் குணத்தை ஒத்துள்ளது என கண்டறிந்து, அந்த தெய்வத்தை அதிதேவதையாக கூறியுள்ளனர். ஒவ்வொரு தெய்வமும் ஒவ்வொரு கிரகத்திற்கு அதிதேவதை.

**சூரியன் - சிவன், சந்திரன் - பார்வதி**

பரமனும், பார்வதியும் படியளப்பவர்கள் என்ற வழக்கு உண்டு. அதுபோலவே அனைத்திற்கும் மூலகாரணாய் சூரியன் இருக்கிறான். அவன் கொடைக்கு நிகரில்லை. உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் அவன் உதவியின்றி பிராணன் கிடைப்பதில்லை. ஆகவே சூரியன் சிவனானார்.

பரமன் மனைவி பார்வதி, சந்திரனுக்கு அதிதேவதை. பூமியை தாயைப் போல் குளிரூட்டும் கிரகம். சூரியனிடத்தில் வெப்பத்தை பெற்று குளிர்ந்த ஒளியாய் தந்து நீர் நிலைகளை பொங்க வைக்கும்.

இந்த இரண்டுகிரகங்களின் நிலை சாதகத்தில் - நல்ல முறையில் இருந்தால், ஒரு ஜாதகர் தன் இன பந்துக்களுடன் இனிதே வாழ்வான் என்பது உறுதி.

**செவ்வாய்: சுப்ரமண்யர்**

ஜாதகத்தில் வீரத்திற்கு இன்றியமையாதது செவ்வாய் பலம். இரும்பு கிரகம். உடல் பலத்திற்கு இன்றியமையாதது செவ்வாயின் நிலை.

வீரத்தில் சிறந்த தெய்வம் முருகன். சுக்குக்கு மிஞ்சிய வைத்தியமும் இல்லை சுப்பிரமணியருக்கு மிஞ்சி தெய்வமும் இல்லை என்பது பழமொழி. அசுரர்களை தேவர்களுக்காக வதம் செய்த தெய்வம் முருகன். ஆதலால் செவ்வாய்க்கு அதிதேவதை சுப்பிரமணியர்.

**புதன்: விஷ்ணு**

ஒரே நேரத்தில் இருவேறு குணத்தைக் கொண்ட கிரகம். தற்சுழற்சி குறைவானது. தெய்வத்தில் இரு நிறம் கொண்ட தெய்வம் விஷ்ணு. அதுபோலவே ஒருபுறம் கடும் வெப்பமும் மறுபுறம் கடும் குளிரும் கொண்டது. எந்த கிரகத்தின் நேர்கோட்டில் 10 பாகைக்குள் உள்ளதோ அதன் குணத்தை பிரதிபலிக்க வல்லது. நியாயம் தவறாமல் கடமையை செய்வதற்கு இன்றியமையாதது இதன் நிலை.

**குரு: பிரம்மா, தட்சிணாமூர்த்தி (குரு)**

ஜாதகத்தில் கல்வி, கேள்வி, கீர்த்திக்கு வழிவகுக்கும் கிரகம். தற்சுழற்சி அதிகம் உள்ளது. இருக்கும் இடத்தைவிட பார்க்கும் இடமே விருத்தியாகும். ஆசிரியர் போன்ற குணத்தை உடையது.

**சுக்ரன்: லக்ஷ்மி, இந்திரன்**

ஒரு ஜாதகத்தில மற்ற கிரகங்கள் நிலை கெட்டிருந்தாலும் அதை நிவர்த்தி செய்ய வல்ல

கிரகம் சுக்ரன். களத்திர காரகன். லக்ஷ்மியை போல் ஐஸ்வர்யத்தை கொடுக்கக் கூடிய கிரகம். ராஜயோகத்தையும், சுகபோக வாழ்க்கையையும், மனைவி வழி சொத்து சேர்க்கையையும் மனைவியின் குண நலத்தையும் கொடுக்கும். 8ம் இடத்திற்கு உரிய கிரகம். இந்திரன் குணத்தைக் கொண்டது. மழைக்கு காரணமான குளிர்ந்த கிரகம்.

**சனி: எமன், சாஸ்தா**

உஷ்ணத்தை பிரதிபலிக்கும் கிரகம். ஜாதகத்தில் சனியின் நிலையே மரணத்தின் வகையை நிர்ணயிக்கும். சனி 0 பாகையில் குளிர்ச்சியை கொடுக்கும். அதனால் சாஸ்தாவிற்கு நிகராக சொல்லப்பட்து. ஆனால் பார்வை உக்கிரமானது. கொடுப்பதிலும், அழிப்பதிலும் சனிக்கு நிகர் சனியே வேறு கிரகம் இல்லை (ஆயுள் காரகன்).

**ராகு: காளி, துர்கை**

கருமாரியின் நிழல் கிரகம். சந்திரன் தவிர மற்ற கிரகங்கள் இதன் 0 பாகையில் சாதகத்தில் வரும்போது பலன் தருவது அரிது. கருமை நிறம் உடையது. ராகு, கேதுக்கு இடையில் மற்ற கிரகங்கள் உடைபட்டு விட்டால் கால சர்ப்ப யோகம், தோஷம் என்று கூறுவதுண்டு. சாதகனின் பிற்பட்ட காலங்களிலேயே பலன் கொடுக்கும். இளம் வயதில் அவதிகளை சந்திக்க நேரும். துஷ்ட குணத்துடன் கொடுக்க வல்ல கிரகம்.

**கேது: விநாயகர், சண்டிகேஸ்வரர்**

ஞானத்தை கொடுக்கும் கிரகம். ஒரு ஜாதகன் பிறக்கும்போது 0 பாகை ஜன்மத்திலிருந்தால் அந்த ஜாதகனுக்கு சித்தியையும் முக்தியையும் கொடுக்கும். நீண்ட நேரம் ஓரிடத்தில் அசையாமலிருந்து பணி செய்வதில் வல்லமையைத் தரும். சோம்பல் சேர்ந்த திடீர் மாற்றத்தை தரவல்ல கிரகம். (நிழல் கிரகம்).

**உடலுக்கு ஒன்பது வாசல்:**

மனிதர்களுக்கு ஒன்பது வாசல் உள்ளது அவை ஒவ்வொன்றையும் கிரகம் ஆட்சி செய்கின்றது அவையானவன

1. சூரியன் - இடக்கண்
2. சுக்கிரன் - வலக்கண்வாசல்
3. சந்திரன் - வாய் வாசல்
4. புதன் - இடமூக்கு வாசல்
5. செவ்வாய் - வலமூக்கு வாசல்
6. வியாழன் - வலக் காதுவாசல்
7. சனி - இடக்காது வாசல்
8. இராகு - மலவாசல்
9. கேது - சிறுநீர் வாசல் ஆகும்

இவற்றுள் அடைக்கப்பட்ட வாயில் ஆகிய கொப்பூழை குளிகன் அல்லது மாந்தி ஆட்சி செய்கிறது! உயிர் பிரியும்போது எந்தத் திசை,எந்தப் புத்தி நடக்கிறதோ அதற்குரிய வாயில் வழியாக உயிர் பிரியும்!

**நவரத்தினங்கள்:**

1. கோமேதகம்
2. நீலம்
3. பவளம்
4. புஷ்பராகம்
5. மரகதம்
6. மாணிக்கம்
7. முத்து
8. வைடூரியம்
9. வைரம்

**பூதங்கள் ஐந்து வகைப்படும் :**

1. ஆகாயம் - வானம்
சப்தம்
ஓசை

2. வாயு - காற்று
ஸ்பர்ஷம்
தொடு உணர்வு

3. அக்னி - நெருப்பு (தீ)
ரூபம்
ஒளி(பார்த்தல்)

4. ஜலம் - நீர்
ரஸம்
சுவை

5. பிருத்வி - நிலம்
கந்தம்
நாற்றம் (மணம்)

**மஹா பாதகங்கள் ஐந்து வகைப்படும்:**

1. கொலை
2. பொய்

3. களவு
4. கள் அருந்துதல்
5. குரு நிந்தை

**வீடு பேறுகள் பதினாறு வகைப்படும்:**

1. புகழ்
2. கல்வி
3. வலிமை
4. வெற்றி
5. நன்மக்கள்
6. பொன்
7. நெல்
8. நல்ஊழ்
9. நுகர்ச்சி
10. அறிவு
11. அழகு
12. பொறுமை
13. இளமை
14. துனிவு
15. நோயின்மை
16. வாழ்நாள்

**புராணங்கள் பதினெட்டு வகைபடும்:**

1. பிரம்ம புராணம்
2. பத்ம புராணம்
3. பிரம்மவைவர்த்த புராணம்
4. லிங்க புராணம்
5. விஷ்ணு புராணம்
6. கருட புராணம்
7. அக்னி புராணம்
8. மத்ஸ்ய புராணம்
9. நாரத புராணம்
10. வராக புராணம்
11. வாமன புராணம்
12. கூர்ம புராணம்
13. பாகவத புராணம்
14. ஸ்கந்த புராணம்
15. சிவ புராணம்
16. மார்க்கண்டேய புராணம்
17. பிரம்மாண்ட புராணம்
18. பவிஷ்ய புராணம்.

**இதிகாசங்கள் மூன்று வகைப்படும்:**

1. சிவரகசியம்
2. இராமாயணம்
3. மஹாபாரதம்



## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 10,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 8,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 5,000/- |
| Full Page Black & White | : | ₹ 5,000/- |
| Half Page Black & White | : | ₹ 2,000/- |
| **Annual Subscription** | : | **₹ 240/-** |

Administrative Office:

**PENA KURAL**
3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 9962245338
Email: penakural@yahoo.com

UPI Number:
9962245338




# முக்கியப் பிரமுகர்கள் வருகையின்போது தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும்:

## தமிழ்நாடு மின்சார வாரியம் சுற்றறிக்கை

முக்கியப் பிரமுகர்கள் வருகையின்போதும், பிரதான அரசு நிகழ்வுகளின்போதும் தடையில்லா மின்சாரம் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்று அனைத்து மண்டல மின்சாரப் பொறியாளர்களுக்கும் தமிழ்நாடு மின்சார வாரிய நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக, வேலூர் பாஜக பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அண்மையில் சென்னை வந்தார். அப்போது, தன்னை வரவேற்க காத்திருந்த தொண்டர்களைப் பார்ப்பதற்காக விமான நிலைய வாயில் அருகே காரை நிறுத்துமாறு ஓட்டுநரிடம் கூறினார். அப்போது மின்தடை ஏற்பட்டது.

எனினும், வாகனத்தில் இருந்து இறங்கிய அமித் ஷா, சிறிது தூரம் நடந்து சென்று, தொண்டர்களைப் பார்த்து கையசைத்தார். பின்னர், காரில் கிண்டியில் உள்ள நட்சத்திர விடுதிக்குப் புறப்பட்டார்.

அவர் சென்றவுடன், பாஜகவினர் அங்கு சாலை மறியலில் ஈடுபட்டனர். திட்டமிட்டு மின்தடை ஏற்படுத்தப்பட்டதாகக் கூறி, போலீஸாரிடம் அவர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தகவலறிந்து வந்த தமிழக பாஜக துணைத் தலைவர் கரு.நாகராஜன் உள்ளிட்டோர், தமிழக அரசுக்கு கண்டனம் தெரிவித்தனர். இது பெரிய சர்ச்சையான நிலையில், தற்போது தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் ஒரு முக்கிய சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்த சுற்றறிக்கையில், முக்கியப் பிரமுகர்கள் வருகையின்போதும், பிரதான அரசு நிகழ்வுகளின்போதும் தடையில்லா மின்சாரம் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்று அனைத்து மண்டல மின்சார பொறியாளர்களுக்கும் மின்வாரிய நிர்வாக இயக்குநர் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள், அரசு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ள இடங்களைப் பொறியாளர்கள் முன்கூட்டியே ஆய்வு செய்ய வேண்டும். அந்தப் பகுதிகளில் மின் தடை ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். ஒருவேளை மின் தடை ஏற்பட்டால் அதனை உடனே நிவர்த்தி செய்ய மாற்று ஏற்பாடுகளை தயார் நிலையில் வைக்க வேண்டும். நிகழ்வு நடைபெறும் இடங்களில் பொறியாளர்கள், மின்சார வாரிய ஊழியர்கள் பணியில் இருக்க வேண்டும் போன்ற உத்தரவுகள் அந்தச் சுற்றறிக்கையில் இடம்பெற்றுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

**பேனா குரல்**
**PENA KURAL**
தமிழ் மாத இதழ்

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் :
நா வீ சிவசங்கர்

ஆசிரியர் : ராதிகா. சி, B.E.,

துணை ஆசிரியர்கள் :
துரை. சந்துரு, ந.திவானன், M.சந்திரசேகர்
K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின்
பா.கார்த்திகேயன், B.நாராயணசாமி,
T.சிவக்குமார், M.அறிவுநிதி

தலைமை நிருபர்கள் :
பா.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன்,
பா.சரவணன், A.தங்கராஜ்,
K.மாரிதுரை, ம.திலிப் குமார்

நிருபர்கள் :
Ba.சரவணன், தமிழ் மணி, உ.சரவணன்,
கா.கலைமணி, தி.பாமா, ஜெபசீலன், கு.தீபக்,
தமிழினி, இளைய தர்ஷினி, P.ஜேசுராஜ்,
பா.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன்,
கா.சுபுலட்சுமி, அன்பு மணி, R.பிரகாஷ்,

புகைப்பட நிருபர்கள் :
வா.கவியரசன், கா.மிதுன் சாய்

ஓவியங்கள்: வீ.சந்தோஷ் குமார்

சட்ட ஆலோசகர்: G. நாகராஜ், B.Sc., LLB.,

இதழ் வடிவமைப்பு: *Tamilni Printz*

நிர்வாக அலுவலகம் :
**பேனா குரல்**
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு :
044-35906002, 9962245338
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com

* பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
* பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.

| Printed, Published and Owned by: **NV SIVASHANKAR** | Printed at **J.M.PROCESS**, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. | Published at No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078. | Editor: **RATHIKA S** |
|---|---|---|---|



S D A
வள்ளுவன் வாய்மை எப்படி பொய்த்து போகாதோ!
அதேபோன்று விலையும்! தரமும்!
உங்கள் ஸ்ரீதேவி ஏஜென்சிஸ் – ல் பொய்த்து போகாது!
பண்டிகைகால
அதிரடி ஆஃபர்களுக்கும் உண்டு...
ஸ்ரீதேவி ஏஜென்சிஸ்
Pay 50%
BALANCE AMOUNT
DAILY EMI
Wholesale Rate
Retail Shopping
0% Finance
Available
Rs.12,999/-
Rs.999/-
Rs.3699/-
Rs.3999/-
Rs.6999/-
Rs.7999/-
Avail Offer Rs.1000/- Advance
MANUFACTURING &
WHOLESALE SUPPLIER
CONTACT
8939406206
No.5, Poonamalli High Road, Near MGR University, Maduravayal, Chennai - 600095.


தீப்ஷிகா
ஆட்டோ ஒர்க்ஸ்
அனைத்து இருசக்கர வாகனங்களும் சரிபார்க்கப்படும்
ROYAL ENFIELD
All kind of bike service and care
Engine Re - work
High Quality
MOTUL
Engine Oil
Refill and Maintance
100 % Genuine Parts
used for your bike
Air Filling
Tyre Puncher
Tube & Tube less
Respect Service
PRICE
QUALITY
SERVICE
Deepshika Auto Works
# 3/896, Pillaiyar Kovil Street, Mettukuppam, Chennai - 600097.
9884166636, 7010399368